வானவில் வாசகம். ப 1.

—ராம அய்யர் (ஏ)

# வானவில் வாசகம்

## முதற் புத்தகம்

(முதல் வகுப்பிற்கு)

ஏ. ராம அய்யர், எம்.
கே. குருஸ்வாமி, பி. ஏ., எல். டி.,
எழுதியது

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்
மதராஸ் பம்பாய் கல்கத்தா லண்டன்
1952

பதிப்புரிமை பெற்றது

# முகவுரை

இவ் வாளவில் வாசகத் தொகுதியானது, சென்னை அரசாங்கத்தாரின் ஆரம்பப் பள்ளிக்கூடப் போதனைத் திட்டத்தையும் (1939), அந்தத் திட்டத்திற்கு விளக்கமாக அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள உபாத்தியாயர் குறிப்புக்களையும் (1940) ஒட்டி எழுதப்பெற்றுள்ளது. பாஷைப் பயிற்சியின் அடிப்படையான தத்துவங்களைப் பின் பற்றியே பாடங்களை அமைத்துள்ளோம். இப்புத்தகத்தைச் சிறுவர்களுக்குக் கற்பிக்கும் முறையை விளக்கிப் புத்தகத்தின் கடைசியில் தந்துள்ள குறிப்புக்களை உபாத்தியாயர்கள் நன்கு கவனிக்கவும்.

ஆசிரியர்கள்

## உயிர் எழுத்துக்கள்

அ ஆ இ ஈ

உ ஊ எ ஏ

ஐ ஒ ஓ ஔ

## மெய் எழுத்துக்கள்

க் ங் ச் ஞ் ட்

ண் த் ந் ப் ம்

ய் ர் ல் வ் ழ்

ள் ற் ன்



அம்மா



அப்பா



அம்மி



அகல்



பாப்பா



கப்பல்

மாமா மாமி அக்கா

கல் பல் பால்

அப்பம் பாகல் காகம்

அ

க ப ம ல

கா பா மா லா

கி பி மி லி

க் ப் ம் ல்





அணில்

ஆணி

6



ஆறு

ஆடு



2



இலை

இரண்டு

ஈ



மாடு



பாடு



மலை



மாலை



கண்



அணா

| | | |
|---|---|---|
| அரம் | மணல் | கல்கண்டு |
| மண் | பாட்டு | கிண்ணம் |
| பட்டு | கம்மல் | காலை |
| காடு | அண்ணை | மணம் |
| ஈரம் | பணம் | பட்டணம் |

கண்டு மண்டு

ஆ இ ஈ

ட ண ர ல ற

டு ணை லை று



உளி



உதடு



உடம்பு



ஊதல்



ஊசி



ஊட்டு



தட்டு



பாம்பு



தலை



சிண்டு



கம்பு



சிலை

| | | |
|---|---|---|
| தண்டு | மாடம் | மாசி |
| சிறு | பாசி. | பள்ளி |
| இட்டு | உமி | செண்டு |
| உப்பு | பாடம் | கடல் |
| டப்பா | பட்டம் | புளி |
| | சட்டம் | |

<u>உ</u>  <u>ஊ</u>

ச  த  ள.

பு  செ



8

எலி

எட்டு



5

ஏணி

ஐந்து





அழு

இழு



7

உழு

ஏழு



ஏ று



துணி



துப்பு



துண்டு



ஊது



புலி

| | | |
|---|---|---|
| அது | கட்டம் | முழுகு |
| ஆட்டம் | கழுவு | எது |
| வெட்டு | ஏது | குட்டு |
| இது | ஆட்டு | குவி |

எ ஏ ஐ

ந வ ழ

கு து வு ழு

# 1

ஒன்று

# 9

ஒன்பது



ஓடு



ஔவையார்



கன்று



பன்றி





பல்லி பள்ளி

வை எடு

ஐம்பது பசி பள்ளம்

யார் பண்டம் உன்னை

வேட்டு என்னை எண்பது

இவை எழுபது இன்று

அறுபது அன்பு எவை

ஓ ஔ ஔ

ய ள

வே வை னை

## பயிற்சி

### எது சரி?



இது பூனை
இது பானை
இது யானை



இது எலி
இது புலி
இது பல்லி



இது அகல்
இது அணில்
இது ஆணி



இது மலை
இது மாலை
இது மாடு

பெயரைப் படி ; படத்தைக் காட்டு.

அணா

ஆடு

இலை



ஈ

உதடு

ஊசி



எலி

ஏணி

ஐந்து



ஒன்பது

ஓடு

ஔவையார்



ப்பாப்பாப் பசி.
அழு, பாப்பா !
என் அம்மா !
பாட்டுப் பாடு.
பாப்பாப் பாட்டு.
பால் ஊட்டு.
துளிப் பால்.





பாலில் ஈ !
அண்ணா, பார் !
ஊதல் ஊது.
தலை ஆட்டு.
கல்கண்டு ஏது ?
ஆடு, பாப்பா !
பார், அப்பா !

ஏணி ஏறு.
படம் மாட்டு.
யார் படம் ?
ஒளவையார் படம்.
மாலை உண்டு.
ஆடல் பாடல்.





அகல் ஒன்று.
துண்டு இரண்டு.
பட்டம் ஒட்டு.
கப்பல் ஓட்டு.
தட்டு எடு.
எட்டு அணா.
உப்புப் புளி.

கடல் உப்பு.
ஆடு மாடு.
அது மாடு.
இது கன்று.
துணி துவை.
தலை முழுகு.
தும்மல் தும்மு.





துப்பு இங்கே!
இலை அறு.
பாம்பு! பாம்பு!
கல் எடு.
ஐயா, புலி!
எடு ஓட்டம்!

ஞாயிறு : ஞாயிற்றுக் கிழமை
திங்கள் : திங்கட் கிழமை
செவ்வாய் : செவ்வாய்க் கிழமை
புதன் : புதன் கிழமை
வியாழன் : வியாழக் கிழமை
வெள்ளி : வெள்ளிக் கிழமை
சனி : சனிக் கிழமை



சட்டி



தொட்டி



பெட்டி

குயவனார் பானை சட்டி,
குடம் ஐந்து கொள்ளும் தொட்டி,
பாத்திரம் பண்டம் கெட்டி;
பணம் காசு வைக்கும் பெட்டி;
என் அண்ணன் சிங்கக் குட்டி,
நான் ஒரு தங்கக் கட்டி!

ஙு ஞ

சு டி ஹ

வார்த்தைகள் அமைத்துப் பார்!




பல் வலை

பால் தலை வால்

தபால் தவலை பால்




படு மாடம்

பாடு மாடு படம்

மடம்




புல்    புதை    புயல்    தையல்




கம்பு    கயல்    கடும் புயல்

வம்பு    புயல்    கம்பு வயல்

நம்பு    புகல்    கரும்பு வயல் நடு

கடைக்குப் போ. காசு கொடு.

கிட்ட நில். கீரை வாங்கு.

குடை பிடி. கூட நடந்து வா.

கெட்டிக்காரன்! கேள்வி கேள்.

கையைப் பிடி. கொம்பால் முட்டும்.

கோவில் மாடு! கௌரி கோவில்.

# க கா கி கீ கு கூ கெ
# கே கை கொ கோ கௌ

சமையல் செய்தேன். சாப்பிட எழுந்திரு.

சின்னானைக் கூப்பிடு. சீக்கிரம் வரச்சொல்.

சுடச் சுடக் குழம்பு. சூடு ஆறட்டும்.

செம்பில் வெந்நீர். சேட்டை செய்யாதே.

சைக்கிள் மணி! சொக்கன் வருகிறான்.

சோறு போடு. சௌக்கியமா, தம்பி?

# ச சா சி சீ சு சூ செ சே
# சை சொ சோ சௌ

சீறு சீறென்று சீறுதே.
சின்னுனுக்குச் சைவச் சாப்பாடு.
மைசூருக்கு நீங்கள் எப்போது போவீர்கள்?
குஞ்சுச் சேவல் கூவுமா?
வேணு கானம் கேள்.
கோவிந்தனைக் கூப்பிடு.
கௌதமன் தங்கை கோமளம்.
கௌசிகன் யார் தெரியுமா?

பல்லைத் துலக்கினேம்.
பாடம் படித்தோம்.
பிறகு குளித்தோம்.
பீர்க்கங்காயுடன்
புளிக் குழம்பு,
பூசணிக்காய்க்கறி,
பெரிய விருந்து!
பேரீச்சம் பழம்,
பை நிறைய
பொட்டுக் கடலை.
போதும் போதும்!
போவோம் பள்ளி!
பௌர்ணமி நாளை.

# ப பா பி பீ பு பூ பெ
# பே பை பொ போ பௌ

ளை

# எண்கள்

1. ஒன்று — ஒரு தோட்டம்
2. இரண்டு — இலந்தை மரம்
3. மூன்று — முருங்கைக்காய்
4. நான்கு — நாவல் பழம்
5. ஐந்து — அவரைக் கொடி
6. ஆறு — ஆரஞ்சு
7. ஏழு — ஏலக்காய்
8. எட்டு — எலுமிச்சை
9. ஒன்பது — ஒட்டு மாம்பழம்
10. பத்து — பறங்கிப் பூ!

முத்து முதலாவது; ராஜம் இரண்டாவது;
மீனா மூன்றாவது; நாகமீ நாலாவது;
அன்னம் ஐந்தாவது; ராதை ஆறாவது;
லக்ஷ்மி ஏழாவது; ஸரஸா எட்டாவது
கோமதி ஒன்பதாவது; பார்வதி பத்தாவது!

மு மூ ரூ
ஜ ஸ க்ஷ

## வார்த்தைகள் அமைத்துப் பார்!

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | க | ம | ம் | ய |
| வி | ன | ா | ா | |

| | | |
|---|---|---|
| ஆவி | காவி | மாயம் |
| ஆம் | ஆமாம் | காயம் |
| கனம் | மகம் | கானம் |

மானம் மாயாவி

ஆகாயம் விமானம்

ஆகாய விமானம்

## வார்த்தைகள் அமைத்துப் பார்!

க ட ட் ண ந

ப ப் ம் ா

படம் பாடம் பட்டம்

பணம் பாணம் பாகம்

கணம் கபம் டப்பா

நகம் நாகம் நாணம்

கட்டணம் பட்டணம்

நாகப்பட்டணம்

# மாதங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சித்திரை | முதல் மாதம் |
| 2. | வைகாசி | இரண்டாம் மாதம் |
| 3. | ஆனி | மூன்றாம் மாதம் |
| 4. | ஆடி | நாலாம் மாதம் |
| 5. | ஆவணி | ஐந்தாம் மாதம் |
| 6. | புரட்டாசி | ஆறாம் மாதம் |
| 7. | ஐப்பசி | ஏழாம் மாதம் |
| 8. | கார்த்திகை | எட்டாம் மாதம் |
| 9. | மார்கழி | ஒன்பதாம் மாதம் |
| 10. | தை | பத்தாம் மாதம் |
| 11. | மாசி | பதினொன்றாம் மாதம் |
| 12. | பங்குனி | பன்னிரண்டாம் மாதம் |

சித்திரை, கத்தரிக்காய்





வைகாசி, வாழைக்காய்

ஆனி, வெள்ளரிக்காய்





ஆடி, முள்ளங்கி

ஆவணி, வெண்டைக்காய்





புரட்டாசி, புடலங்காய்

ஐப்பசி, பாகற் காய்





கார்த்திகை,
கார்மாங்காய்

மார்கழி, முட்டைக் கோஸ்





தை, அவரைக்காய்

மாசி, பூசணிக்காய்





பங்குனி, பறங்கிக்காய்

## பயிற்சி

(அ) உரக்கப்படி; படித்தபடி செய் :—

1. வெளியில் போகிறேன் ;
உள்ளே, வருகிறேன்.

2. கதவை மூடுகிறேன் ;
கதவைத் திறக்கிறேன்.

3. ஜன்னலை எண்ணுகிறேன் ;
ஒன்று, இரண்டு, மூன்று.

4. பலகைமேல் நிற்கிறேன் ;
கீழே குதிக்கிறேன்.

5. சிலேட்டை எடுக்கிறேன் ;
சிலேட்டை வைக்கிறேன்.

6. தோளைத் தொடுகிறேன்;
கையை நீட்டுகிறேன்.

7. தலையைக் குனிகிறேன்;
நிமிர்ந்து நிற்கிறேன்.

8. இடத்தில் உட்காருகிறேன்;
புத்தகத்தை மூடுகிறேன்.

(ஆ) மனத்திற்குள் படி; படித்தபடி செய்:—



உபாத்தியாயரிடம் போ.

சாக்பீஸ் வாங்கிக்கொள்.

கரும்பலகை கிட்ட நில்.

அதில் உன் பெயர் எழுது.

சற்று எட்டி நில்.

எழுதியதைப் படி.

எழுதியதை அழி.

இடத்தில் போய் உட்கார்.



செய்ததை வரிசையாகச் சொல்.

ஒன்றே ஒன்று ஒன்று—ஒரு கிராமம்.

ஒன்றும் ஒன்றும் இரண்டு—
ஊரில் கோவில்கள் இரண்டு.

இரண்டும் ஒன்றும் மூன்று—
குளிக்கக் குளங்கள் மூன்று.

மூன்றும் ஒன்றும் நான்கு—
வசிக்கும் தெருக்கள் நான்கு.

நான்கும் ஒன்றும் ஐந்து—
பஞ்சாயத்தார் ஐந்து.

ஐந்தும் ஒன்றும் ஆறு—
மொத்தம் கடைகள் ஆறு.

ஆறும் ஒன்றும் ஏழு—
என் வகுப்பில் பலகைகள் ஏழு.

ஏழும் ஒன்றும் எட்டு—
பள்ளியில் வகுப்புக்கள் எட்டு.

எட்டும் ஒன்றும் ஒன்பது—
உபாத்தியாயர் ஒன்பது.

ஒன்பதும் ஒன்றும் பத்து—
என் பொம்மைப் புத்தகம் பத்து.

## நம் உடல்




1. மீன் பிடிக்க ஒரு வலை;
   மரத்தில் முளைப்பது இலை;
   மனிதருக்குள்ளது

   **தலை.**

2. பாதையில் கிடப்பது மண்;
   பாட்டுப் பாடுவாள் பெண்;
   பார்க்க உதவுவது

   **கண்.**

3. சேட்டை செய்யாதவன் சாது;
   சூடாயிருந்தால் ஊது;
   சத்தத்தைக் கேட்பது

   **காது.**

4. மரத்திலெல்லாம் கெட்டி தேக்கு;
   மூட்டை கட்ட ஒரு சாக்கு;
   முகர்ந்து பார்க்க ஒரு

   **மூக்கு.**

5. பழுக்காமலிருப்பது காய்;
   பரிவுடன் காப்பவள் தாய்;
   பேச உதவுவது

   **வாய்.**

6. வயலில் விளைவது நெல்;
வானத்தில் தெரிவது வில்;
வாய்க்குள் இருப்பது
பல்.

7. பெரியவர்களுக்கு
வெற்றிலை பாக்கு;
பெரிய தட்டில் வைத்து
அதை நீ தூக்கு;
போட்டதும் சிவக்கும் அவர்
நாக்கு.




8. நாம் படிப்பதெல்லாம்
தமிழ் எழுத்து;
நன்ருய்ப் படிக்காதவன்
திரிவான் கொழுத்து;
நம் தலைக்குக் கீழுள்ளது
கழுத்து.

9. பண்டங்கள் வாங்க ஒரு பை;
பிய்ந்துபோனல் அதைத் தை;
பிடித்துத் தூக்க இரு
கை.

10. அவல் இடிக்க ஒரு உரல்;
அழைக்கப்பேச ஒரு குரல்;
எண்ணிப் பார்க்கப் பத்து
விரல்.




11. பொட்டலம் கட்டக் கயிறு;
பல்லுக்கொரு பெயர் எயிறு
பக்ஷணம் நிரப்ப ஒரு
வயிறு!

12. படகைச் செலுத்தத் துடுப்பு;
பலகாரம் செய்ய அடுப்பு;
பட்டுத்துணி கட்ட
இடுப்பு.

13. நாய் ஆட்டுவது வால்;
நல்ல பசு தருவது பால்;
நடக்க உதவுவது
கால்.

14. பத்து விரல்களின் நுனியில்
நகம்;
பிறருக்கு உழைப்பது சுகம்;
புன்னகை பூத்தது
முகம்.

## பயிற்சி

அங்கங்களின் பெயரைப் பூர்த்தி செய் :—

| | |
|---|---|
| பார்க்க உதவுவது ...... | குரல் |
| சத்தத்தைக் கேட்பது ...... | காது |
| முகர்ந்து வாசனை பார்ப்பது ...... | விரல் |
| ருசியை உணர்வது ...... | கண் |
| உணவை எடுப்பது ...... | முகம் |
| உணவைக் கடிப்பது ...... | மூக்கு |
| உணவை நிரப்புவது ...... | கை |
| உரக்கக் கூப்பிடுவது ...... | வயிறு |
| எண்ணிப் பார்ப்பது ...... | நாக்கு |
| புன்னகை பூத்தது ...... | பல் |

இந்த வார்த்தையைப் போல் ஓசையுள்ள ஒரு அங்கத்தின் பெயர் சொல் :—

வெற்றி  உருவம்  அன்னம்

மலை  எழுத்து  தேள்

மதகு  அடுப்பு  நாய்

வால்




| | |
|---|---|
| ஜனவரி | ரோஜாப்பூ |
| பிப்ரவரி | செவ்வந்தி |
| மார்ச்சு | மல்லிகைப்பூ |
| ஏப்ரல் | அலரிப்பூ |
| மே | மருக்கொழுந்து |
| ஜூன் | ஜாதிப்பூ |
| ஜூலை | முல்லைப்பூ |
| ஆகஸ்டு | தாழம்பூ |
| செப்டம்பர் | சம்பங்கி |
| அக்டோபர் | அந்திமல்லி |
| நவம்பர் | செம்பருத்தி |
| டிசம்பர் | கனகாம்பரம் |






பொங்கல் பண்டிகை, சர்க்கரைப் பொங்கல்
ஈஸ்டர் பண்டிகை, வருஷப் பிறப்பு
கோடை விடுமுறை, கல்யாணங்கள்
சுதந்திரத் திருநாள், கொடி வணக்கம்
ஆயுத பூஜை, கலைமகள் வணக்கம்
தீபாவளிப் பண்டிகை, புதுத் துணி, பட்டாசு
கார்த்திகை தீபம், அப்பம் பொரி

**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!**



## பயிற்சி

மொத்தம் மாதங்கள் எத்தனை?
மொத்தம் மாதங்கள் ......
இது எந்த மாதம்?
இது தமிழ் ... மாதம்; இங்கிலீஷ் ... மாதம்.
வருஷத்தில் இது எத்தனையாவது மாதம்?
தமிழ் ... வது மாதம்; இங்கிலீஷ் ... வது மாதம்.
பங்குனிக்கு அடுத்தது எந்த மாதம்?
பங்குனிக்கு அடுத்தது ...... .
ஆவணிக்கு அடுத்தது எந்த மாதம்?
ஆவணிக்கு அடுத்தது ...... .
செப்டம்பருக்கு முந்திய மாதம் எது?
செப்டம்பருக்கு முந்திய மாதம் ...... .
மாதத்தில் எத்தனை வாரங்கள்?
மாதத்தில் ...... வாரங்கள்.
வாரத்தில் எத்தனை நாட்கள்?
வாரத்தில் ...... நாட்கள்.
ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய நாள் என்ன கிழமை?
ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய நாள் ...... கிழமை.
இன்று என்ன கிழமை?
இன்று ...... கிழமை.



என்ன படம் அது, ராஜு?

இது எங்கள் குடும்பப் படம். கிட்ட வந்து பார்.

எப்போது எடுத்தது?

என் அக்காள் கல்யாணத்தில்.

கழுத்தில் மாலையோடு இருப்பவள் உன் அக்காள் அல்லவா? அவள் பெயர் என்ன?

ஸரோஜா.

உன் அக்காள் புருஷன்?

அவர் என் அத்தான். அவர் பெயர் கிருஷ்ணன்.

அவருக்கு அடுத்தாற்போல் இருப்பவர் உன் அப்பாவா?

இல்லை, அவர் என் தாத்தா.

உன் அக்காள் பக்கத்தில் இருப்பவர் உன் பாட்டி அல்லவா ?

ஆமாம்...பாட்டி பக்கத்தில் என் அப்பா.

உன் அப்பா பெயர் என்ன ?

லக்ஷ்மணன்.

உன் அம்மா பெயர் ?

காமாக்ஷி.

இதோ பார், உன் அண்ணன் மஹாதேவன்!

என் தம்பி சேஷனைக் கண்டுபிடி, பார்ப்போம்!

இதோ, உன் தாத்தா காலடியில் இருக்கிறன்.

பலே! என் அம்மா பக்கத்தில் ?

உன் மதனி தானே ?

ஆமாம். என் மதனியின் பெயர் ராஜலக்ஷ்மி.

உன் அப்பாவிற்கு வலது புறம் ?

என் அத்தையும் அத்தை புருஷனும். பின் புறம் நிற்பவர்கள் என் மாமாவும் மாமியும்.

மாமியின் இடுப்பில் இருப்பது ?

என் சின்னத் தங்கை மீனு.!



என் அத்தை மகனுக்குக் கல்யாணம்!
ஓடி ஒளிகிறாள் என். அக்காள்!

அவளைப் பிடித்து வந்தாள் என் அத்தை
மகள்,

வாசனைத் தைலம் தடவி விட்டாள்,

தலையில் பூவைத்துப் பின்னிவிட்டாள்,

நெற்றியில் குங்குமப் பொட்டுமிட்டாள்

பட்டுப் புடவையைக் கட்டிவிட்டாள்,

பவுன் சங்கிலியும் போட்டுவிட்டாள்,

பக்கத்தில் நின்று பரிகசித்தாள்—மணப்

பந்தலில் கொண்டு நிறுத்திவிட்டாள்!



என் அத்தை மகனை அழைத்து வந்தார்,

மேளங்கள் தாளங்கள் முழங்க வைத்தார்,

மோட்டார் ஊர்வலம் செய்து வைத்தார்,

மெதுவாய்ப் பந்தலில் சேர்த்து வைத்தார்,

உறவினர் நண்பர்கள் சூழ்ந்து கொண்டார்!



மல்லிகை ரோஜா மணம் வீசும்

மாலையை இட்டனள் என் அக்காள் ;

மனதில் மகிழ்ந்தாள் என் அக்காள் !

மெல்லெனச் சிரித்தார் அத்தை மகன்,

மணமகள் பக்கம் உட்கார்ந்து கொண்டார்.

உற்றார் உறவினர் சூழ்ந்து கொண்டார் ;

பாட்டுக்கள் பாடிப் பரிசளித்தார் ;



சர்க்கரை, சந்தனம் வழங்கி வந்தார்;
வெற்றிலை பழவகை வழங்கி வந்தார்;
வாழ்த்துக்கள் கூறி மன மகிழ்ந்தார்!



அம்மாப் பெண்ணுக்குக் கல்யாணம்!
யானை மேலே ஊர்வலம்!
அவரவர் வீட்டில் சாப்பாடு!
கொட்டு மேளம் கோவிலிலே!
வெற்றிலை பாக்குக் கடையிலே!



வாழிய செந்தமிழ் !

வாழ்க நல் தமிழர் !

வாழிய பாரத மணித்திரு நாடு !

வந்தே மாதரம் !

வந்தே மாதரம் !! வந்தே மாதரம் !!!

# உபாத்தியாயருக்கான குறிப்புகள்

நன்றாகப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது இம்முதற் பாட புத்தகத்தின் உத்தேசமாகும்.

**பேச்சு** :—முதன் முதலில் ரசமான சம்பாஷணை மூலமாகவும் கதைகள் மூலமாகவும் பிள்ளைகளுக்குப் படிப்பில் ஆவல் உண்டாகும்படிச் செய்யவேண்டும். சங்கோசமில்லாமல் பேசுவதற்குப் பிள்ளைகளைத் தூண்டவேண்டும். அவர்கள் ஏற்கனவே கற்றுக்கொண்டுள்ள சொற்களைப் பிழையில்லாமலும் தெளிவாகவும் உச்சரிக்கச் செய்ய வேண்டும். (ழ என்னும் ஒலியைச் சுத்தமாக உச்சரிக்கக் கற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியமாகும்.) பிள்ளைகளுக்குத் தெரிந்த விஷயங்களைப் பற்றிச் சிறிய வாக்கியங்களில் பிழையின்றிப் பேசும் பயிற்சி அவர்களுக்கு அளித்துக் கொண்டே யிருக்கவேண்டும். பேச்சுப் பயிற்சிதான் பாஷைப் பயிற்சியின் அடிப்படை என்பதை உபாத்தியாயர் நன்கு உணர வேண்டும்.

வாசிப்பு :—தனி எழுத்துக்களைக் கற்றுக்கொடுப்பதைவிட, சொற்கள் மூலம் எழுத்துக்களைக் கற்றுக் கொடுப்பதுதான் சிறந்த முறை. முதல் சில பக்கங்களில் காணும் படங்களின் உதவியினால் படங்களின் அடியில் உள்ள சொற்களை வாசிக்கச் செய்வது எளிது. அப்படி அச்சொற்களை அடிக்கடிக் கவனத்துடன் வாசிக்கும் பிள்ளைகளின் மனத்தில் எழுத்துக்களின் உருவங்கள் நன்கு பதிந்துவிடும். பிறகு அவ்வெழுத்துக்களால் அமைந்த

வேறு சொற்களைப் படிப்பது சுலபமாகும். சொற்களுக்குத் தேவையான எழுத்துக்கள் வரும்போது அவைகளைக் கற்றுக்கொடுத்தால் போதுமானது. சொற்களில் வராத எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்க வேண்டியதேயில்லை.

வாசிப்புப் பயிற்சிக்காகப் பிள்ளைகள் நன்கு ரசிக்கக் கூடிய சிறு வாக்கியங்களும் வாக்கியத் தொடர்களும் இப் புத்தகத்தில் வந்திருக்கின்றன. பிள்ளைகள் விரும்பி மனப் பாடம் பண்ணி ஒப்பிக்கக் கூடிய பாடல்களும், பல பிள்ளைகள் சேர்ந்து நாடக ரூபத்தில் நடித்துக் காட்டக் கூடிய பாடல்களும் இதில் அடங்கியுள்ளன என்பதையும் கவனிக்கவும். கூடிய அளவு பிள்ளைகள் தாமாகவே புரிந்து கொள்ளக்கூடிய சொற்களாலேயே அமைந்துள்ள பாடல்கள் தான் இப்புத்தகத்தில் வந்துள்ளன.

இதில் தந்துள்ள அப்பியாசங்கள் அனேகமாக வாசிப்புப் பயிற்சிக்கான அப்பியாசங்கள்; இவை மாதிரிக்காகத் தரப்பட்டவை; இவைகளைப் போன்ற மற்ற அப்பியாசங்களை உபாத்தியாயர்கள் அமைத்துக்கொள்ள வேண்டும். வார்த்தைகளையும் வாக்கியங்களையும் அமைக்கும் பயிற்சியை அட்டைகள் மூலம் அளிக்கலாம்.

முதல் வகுப்பில் மௌன வாசிப்புக்கு இடமில்லை என்றே சொல்லலாம். 32-ம் பக்கத்து அப்பியாசத்தைச் செய்யும்போது மனத்திற்குள்தான் படிக்கவேண்டுமென்று பிள்ளைகளை வற்புறுத்த வேண்டியதில்லை.

எழுத்து :—முதல் பாடத்திலிருந்தே எழுதக் கற்றுக் கொடுப்பது சரியான முறையன்று. அனேகமாக எல்லா

## முகவுரை

இவ் வானவில் வாசகத் தொகுதியானது, சென்னை அரசாங்கத்தாரின் ஆரம்பப் பள்ளிக்கூடப் போதனைத் திட்டத்தையும் (1939), அந்தத் திட்டத்திற்கு விளக்கமாக அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள உபாத்தியாயர் குறிப்புக் களையும் (1940) ஒட்டி எழுதப்பெற்றுள்ளது. பாஷை பயிற்சியின் அடிப்படையான தத்துவங்களைப் பின்பற்றியே பாடங்களை அமைத்துள்ளோம். இப்புத்தகத்தைச் சிறுவர் களுக்குக் கற்பிக்கும் முறையை விளக்கிப் புத்தகத்தில் தந்துள்ள குறிப்புக்களை உபாத்தியாயர்கள் நன்கு கவனிக்கவும்.

ஆசிரியர்கள்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை .. .. .. | 2 |
| | இது என் புத்தகம் .. .. .. | 5 |
| | மௌனவாசிப்புப் பயிற்சி I .. .. | 6 |
| | ,, ,, II .. .. | 7 |
| | ,, ,, III .. .. | 8 |
| | ,, ,, IV .. .. | 9 |
| 1. | வானவில் .. .. .. | 10 |
| 2. | கடைத் தெரு .. .. .. | 12 |
| 3. | கப்பல் வந்தது .. .. .. | 15 |
| 4. | ஆடைகள் .. .. .. | 16 |
| 5. | மழையே வா! .. .. .. | 18 |
| 6. | பருவங்கள் .. .. .. | 20 |
| 7. | சிங்கம் பேசுகிறது I .. .. .. | 22 |
| 8. | ,, ,, II .. .. .. | 25 |
| 9. | மாதங்கள் (விளையாட்டு) .. .. | 27 |
| 10. | நம் நாடு .. .. .. .. | 30 |
| 11. | பாப்பாப் பாட்டு .. .. .. | 32 |
| 12. | பட்டணங்கள் .. .. .. | 33 |
| 13. | ஆறு .. .. .. .. | 34 |
| 14. | தமிழ்நாட்டு ஆறுகள் .. .. | 36 |
| 15. | பக்ஷணம் .. .. .. .. | 38 |

16. சுதந்திர வாழ்க்கை I .. .. 39
17. ,, ,, II .. .. 41
18. பொறியில் சிக்கிய சுண்டெலி .. . 43
19. நல்ல நண்பர்கள் (நாடகம்) (i) மரத்தடி .. 44
(ii) வலையின் அருகில் .. 45
(iii) குளத்தங்கரை .. 47
20. சத்தம் போடாதே! .. .. .. 50
21. 'திராக்ஷை புளிக்கும்' (படப் பாடம்) .. 51
22. சிங்கமும் எருதுகளும் (நாடகம்)
(i) சிங்கமும் நரியும் .. 53
(ii) நரியும் எருதும் .. 55
(iii) சிங்கமும் நரியும் .. 56
23. பசு .. .. .. .. 58
24. பசு .. .. .. .. 60
25. குடை ராட்டினம் .. .. .. 62
பரீக்ஷை தேறிவிட்டேன்! .. .. 64

## ஆசிரியர் நன்றி

தமிழ்க் கவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களிலிருந்து சில பகுதிகளை இப் புத்தகத்தில் சேர்ப்பதற்கு அனுமதியளித்த சென்னை அரசாங்கத்தாருக்கு ஆசிரியர்கள் நன்றி செலுத்துகிறார்கள்.

*சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே—அதைத்*
*தொழுது படித்திடடி பாப்பா !*

*—பாரதியார்*

# இது என் புத்தகம்

என் பெயர் ........ ........................ ..........................

என் வயது .... ...... . ........................................ ........ ....

என் அப்பா பெயர் ஸ்ரீ ........................................

நான் படிப்பது ....................................... ஸ்கூல்

நான் வசிப்பது ........................................ தெரு

என் ஊர் .......................................................... .......

நான் நன்ருகப் படிப்பேன்.

புத்தகத்தையும் அழகாக வைத்துக் கொள்வேன். என் எழுத்து மணி மணியாக, முத்து முத்தாக, இருக்கும்!

.... .... .... .... .... .... .... .... ....

தேதி .... ... ... ... ....  என் கையெழுத்து

# மௌன வாசிப்புப் பயிற்சி-1

மௌனமாக வாசித்து, பொருத்தமான பெயரைப் பொறுக்கி எழுது :

காக்கை

மயில்

கோழி





படம்

பலகை

புத்தகம்

அப்பா

அம்மா

அண்ணா





ஓநாய்

கழுதை

சிங்கம்

# மௌன வாசிப்புப் பயிற்சி-2

மௌனமாக வாசித்து, பொருத்தமான பெயரைப் பொறுக்கி எழுது :



மல்லிகை

ரோஜா

தாமரை

கோபாலன்

ஸ்ரீதரன்

ஸரஸ்வதி





குதிரை வண்டி

மாட்டு வண்டி

ரெயில் வண்டி

திருவிழா

நாடகம்

விருந்து



# மௌன வாசிப்புப் பயிற்சி-3

மௌனமாக வாசித்து, பொருத்தமான சொல்லைப் பொறுக்கி எழுது :

படிக்கிறாள்

ஓடுகிறாள்

தூங்குகிறாள்





சாப்பிடுகிறான்

தாண்டுகிறான்

பேசுகிறான்

எழுதுகிறார்கள்

பாடுகிறார்கள்

விளையாடுகிறார்கள்





பால் தருகிறது

புல் தின்கிறது

வால் ஆட்டுகிறது

# மௌன வாசிப்புப் பயிற்சி-4

மௌனமாக வாசித்து, பொருத்தமான வாக்கியத்தைப் பொறுக்கி எழுது:



நாய் வீடு காக்கிறது.

பசு மேய்கிறது.

குதிரை பாய்கிறது.

ஜன்னல் பக்கம் நிற்கிறேன்.

புத்தகத்தைத் திறந்து படிக்கிறேன்.

தவைத் திறக்கிறேன்.





ஜானகி கூப்பிடுகிறாள்.

லக்ஷ்மி பாடுகிறாள்.

ஹரிஹரன் சிரிக்கிறான்.

அப்பா புத்தகம் படிக்கிறார்.

உபாத்தியாயர் கரும்பலகையில் எழுதுகிறார்.

ரமா பக்ஷணம் வாங்குகிறார்.



# பாடம் 1



## வான வில்

வெயிலும் அடித்தது, மழையும் பெய்தது,
வானத்தில் அதோ பார் வில்!
வளைவாய்ப் பெரிதாய், உயர்வாய், அழகாய்,
வர்ணங்கள் நிறைந்ததோர் வில்!

உள்ளம் குளிர்ந்திடும் ஊதா நிறமுடன்
கடலின் கருநீலம்,
வானத்தின் நீலம், வயல்களின் பச்சை,
பொன் நிற மஞ்சளுமாம்,
ஆரஞ்சின் வர்ணம், அழகுள சிவப்பு,
ஆக நிறம் ஏழு!

இத்தனை நிறங்கள் எப்படி எழுந்தன
வானத்து வீதியிலே?
அத்தனை நிறத்தையும் அழகுடன் வடித்த
ஆடைகள் அணிவோம் நாம்—நல்
ஆடைகள் அணிவோம் நாம்!

## பயிற்சி

1. நீ வான வில்லைப் பார்த்திருக்கிறாயா?
2. வான வில்லின் நிறங்கள் எத்தனை?
3. வான வில்லின் நிறங்களின் பெயர்களை எழுது.
4. அந் நிறங்களின் பெயர்களை எழுத்து வரிசை தவறாமல் எழுது.

# பாடம் 2



## கடைத் தெரு

அப்பா! நான் முதல் வகுப்புத் தேறிவிட்டேன். இரண்டாம் வகுப்பில் படிக்கப்போகிறேன். எனக்குப் புதுச் சட்டை நிஜார் வேண்டும். இப்போதே வாங்கித்தாருங்கள். இதோ, துணிக்கடை!

இந்த நீல நிஜார் நீளம்; இது வேண்டாம். பச்சை நிஜார் குட்டை; இது வேண்டாம். பழுப்பு நிஜார் எனக்குச் சரியான அளவு. அதையே வாங்குங்கள், அப்பா. வெள்ளைச்சட்டை வேண்டாம்; அது அழுக்குப் பிடிக்கும். சிவப்புச்சட்டை சின்னது; எனக்குக் கழுத்தைப் பிடிக்கும்! ஃபலேட்டு

நிறத்தில் இருக்கிறதே., இதைப் போட்டுப் பார்க்கட்டுமா? இதுதான் சரி, அப்பா.

அடுத்தாற்போல் புத்தகக்கடை, அப்பா. என் பழைய ஸ்லேட்டு உடைந்துவிட்டது; புது ஸ்லேட்டு வாங்கவேண்டும். இவ்வளவு பெரிய ஸ்லேட்டு எனக்கு எதற்கு? என் பையில்கூட நுழையாது; மிகவும் கனம். இதோ இது லேசாகவும் அழகாகவும் இல்லையா? இது போதும்.

புத்தகங்கள் இன்னொரு நாள் வாங்கிக் கொள் வோம். இப்போது வீட்டிற்குப் போகலாம், வாருங்கள், அப்பா.

## பயிற்சி

வெண்மை என்றாலும் வெளுப்பு என்றாலும் ஒன்றுதான்.

கருமை என்றாலும் கறுப்பு என்றாலும் ஒன்றுதான்.

1. இது என்ன நிறம்?

| | | |
|---|---|---|
| காக்கை. | வெற்றிலை | சுண்ணாம்பு |
| தாழம்பூ | தங்கம் | இரத்தம் |
| மல்லிகை | ரோஜா | புல் |
| குடை | ஆகாயம் | வெள்ளி |

வெண்மை, சிவப்பு, கறுப்பு, பச்சை, நீலம், மஞ்சள்

கறுப்புப்பசு தரும் பால் என்ன நிறம்?
சிவப்புப்பசு தரும் பால் என்ன நிறம்?
வெள்ளைப்பசு தரும் பால் என்ன நிறம்?

2. எது கனம், எது கனமல்ல?

மேஜை, புத்தகம்
பஞ்சு, இரும்பு
கருங்கல், புஷ்பம்
தண்ணீர் நிறைந்த குடம், வெறும் குடம்

3. எதைவிட எது பெரிது?

(1) பூனை, பசு
(2) யானை, புலி
(3) சைக்கிள், மோட்டார்
(4) மோட்டார், ரெயில் வண்டி



# பாடம் 3

## கப்பல் வந்தது!

கப்பல் வந்தது, கப்பல் வந்தது,
கதர்க்கொடிக் கப்பல் கரைக்கு வந்தது!
கப்பல் நிறைய என்ன வந்தது?
விதவிதச் சொக்காய் குல்லா வந்தது.

கப்பல் வந்தது, கப்பல் வந்தது,
கப்பல் நிறைய என்ன வந்தது?
பட்டுப் பாவாடை சிற்றுடை,
சட்டை தாவணி கைக்குட்டை.

கப்பல் நிறையக் கடுக்கன் வந்தது,
கழுத்துச் சங்கிலி ஒட்டியாணம்,
கைவளை கொலுசு கால் காப்பு,
மோதிரம் மூக்குத்தி லோலாக்கு.

பம்பரம் பூப்பந்து கால்பந்து,
கோலி கிட்டி காற்றாடி,
பழம் தேன் சர்க்கரை கல்கண்டு,
பிஸ்கோத்து மிட்டாய் சாக்கலெட்டு!

### பயிற்சி

கப்பலில் வந்த சாமான்களின் பெயர்களை எழுத்து வரிசை தவறாமல் எழுது.

# பாடம் 4

## ஆடைகள்

இதோ, என் கையில் தக்ளி ! இன்னொரு கையில்



பட்டை போட்ட பருத்தி. இந்தப் பருத்தியை நான் நூலாக நூற்கப் போகிறேன். என் அண்ணாவும் நூற்கிறார்; அவர் இராட்டையில் நூற்கிறார். தக்ளியை நான் போகும் இடமெல்லாம் கொண்டு போவேன். இராட்டையை அப்படித் தூக்க முடியுமா ?



நூற்ற நூலைச் சேர்த்துத் துணியாக நெய்யலாம். நெய்ய உதவுவது கைத்தறி. கையால் நூற்றுக் கையால் நெய்தது கதர். நான் கட்டியிருப்பது கதர்.



பருத்தியை இயந்திரத்தாலும் நூற்கலாம். அந்த நூலைக் கைத்தறியாலும் நெய்யலாம். இயந்திரத்தாலும் நெய்யலாம். இந்தக் கைத்தறித் துணியைச் சிலர் 'நாட்டுத் துணி' என்பார்கள். இயந்திரத்தால் நெய்தது 'மில்' துணி.

நூல் வெண்மையானது. அது சாயம் தோய்த்தால் வர்ண நூல் ஆகும். அதைக்கொண்டு எந்த நிறத்திலும் துணி நெய்யலாம். துணியில் பூப்பூவாக அச்சுப் போடுவதும் உண்டு. சீட்டித்துணி அச்சுப்போட்ட துணி.



துணியில் பருத்தித் துணி ஒருவகை. வேறுவகைத் துணி சொல், பார்ப்போம்!

## பயிற்சி

*1.* **காலி இடத்தை நிரப்பி எழுது :—**

நூற்கும்போது தக்ளியைப் பிடிப்பது..............கை.

நூற்கும்போது பருத்தியைப் பிடிப்பது..............கை.

*2.* என் அண்ணு நூற்கிருர்.

**இதைப்போல் பொருத்தமான வார்த்தையைச் சேர்.**

| | |
|---|---|
| என் தங்கை | நூற்கிறேன் |
| நாங்கள் | நூற்கிருய் |
| என் அப்பா | நூற்கிருேம் |
| அவர்கள் | நூற்கிறீர்கள் |
| நீ | நூற்கிருன் |
| அவன் | நூற்கிருள் |
| நீங்கள் | நூற்கிருர் |
| நான் | நூற்கிருர்கள் |

# பாடம் 5



## மழையே வா!

வா! வா! மழையே வா!
காயும் வெயிலில் கருகி உலர்ந்திடும்
மரமும் செடியும் தழைக்க வா!

வா! வா! மழையே வா!
காற்று அனலாய்க் கொதிக்க, எழுந்திடும்
வியர்வையும் புழுதியும் தணிக்க வா!
வா! வா! மழையே வா!

அப்பா வாங்கிய அழகிய புதுக்குடை
ஆசையாய்ப் பிரித்து நான் பிடிக்க வா!
வா! வா! மழையே வா!

## பயிற்சி

1. மௌனமாகப் படி ; காலியான இடங்களில் பொருத்தமான சொற்களைப் போட்டு எழுது :—

   1. வெயில்..............கிறது.
   2. மரமும் செடியும்..............
   3. காற்று..............
   4. என் புதுக்குடை அப்பா..............
   5. நான் மழையில் புதுக்குடை..............

2. மௌனமாகப் படி ; வாக்கியங்கள் அமைத்து எழுது :—

| | |
|---|---|
| என் உபாத்தியாயர் | நூற்கிறார்கள் |
| என் சிநேகிதர்கள் | நூற்கிறார் |
| என் மாமா | |
| பிள்ளைகள் | |

| | |
|---|---|
| நான் நேற்று பள்ளிக்கூடம் | வருவேன் |
| நான் இப்போது பள்ளிக்கூடம் | வந்தேன் |
| நான் நாளை பள்ளிக்கூடம் | வருகிறேன் |

# பாடம் 6

## பருவங்கள்

நாம் அணிவது பெரும்பாலும் பருத்தித்துணி. பருத்தித்துணி மலிவு, பட்டும் கம்பளியும் விலை அதிகம். நாம் குளிர் காலத்தில் கம்பளி அணியலாம். கம்பளி உடம்பின் உஷ்ணத்தைக் காக்கும். நம் தமிழ் நாட்டில் குளிர்காலம் எப்போது? கார்த்திகை முதல் மாசி வரை பனியும் குளிரும் உண்டு. மொத்தம் அப்படி நான்கு மாதங்கள்.

பங்குனி பிறந்தால் வெயில் 'சுரீர்' என்று உறைக்கும். சித்திரை வைகாசியில் வெயில் கடுமை; இவை கோடை மாதங்கள். வேறு இடங்களில் ஆனி, ஆடி, ஆவணியில் நல்ல மழை. தமிழ் நாட்டில் புரட்டாசி முதல் மார்கழி வரை மழைப் பருவம்.

குளிர் காலத்தில் நாம் சும்மா உட்காருவது தப்பு. எப்போதுமே நாம் நன்றாக ஓடி ஆடி விளையாட வேண்டும். குளிர்காலத்தில் அப்படி ஓடி விளையாடுவது இன்னும் அவசியம். அது உடம்புக்கு மிகவும் நல்லது. களைத்துப்போகும்வரை விளையாடினால் நமக்குக் குளிர் தோன்றாது. அப்போது கம்பளியும் போர்வையும் நமக்குத் தேவை இல்லை. உடம்பு ஆரோக்கியமாக இருக்கும்.

மார்கழியில், குளிர்காலத்தில், நமக்குச் சின்ன விடுமுறை. பெரிய விடுமுறை நமக்கு எப்போது?

## பயிற்சி

கவனமாகப் படி; கேள்விகளின் விடைகளை வாக்கியங்களாக அமைத்து எழுது :—

கோடைக் காலத்தை வேனில் காலம் என்றும் சொல்வதுண்டு.

மழைக் காலத்தை மாரிக்காலம் என்றும் சொல்வதுண்டு; மாரி என்ருல் மழை.

' மாதம் மும்மாரி பெய்தது " என்று சொல்வதுண்டு.

கார் என்ருல் மழையைக் கொடுக்கும் மேகம்.

| | | |
|---|---|---|
| சித்திரை | வைகாசி | இளவேனில் (இளங்கோடை) |
| ஆனி | ஆடி | முதுவேனில் (முதிர்ந்த கோடை) |
| ஆவணி | புரட்டாசி | கார் காலம் (மழைக்காலம்) |
| ஐப்பசி | கார்த்திகை | கூதிர் காலம் (பின் மழைக்காலம்) |
| மார்கழி | தை | முன் பனிக்காலம் |
| மாசி | பங்குனி | பின் பனிக்காலம் |

இப்படி இரண்டிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஒரு பருவம்.

மொத்தம் பருவங்கள் எத்தனை?

இது எந்த மாதம்? இது எந்தப் பருவம்?

உனக்குப் பிடித்தது எந்த மாதம்?

அது எந்தப் பருவம்?

# பாடம் 7



## சிங்கம் பேசுகிறது-1

நான் யார், தெரியுமா? நான்தான் சிங்கம். காட்டுக்கு ராஜா. யானையைக்கூடக் கொன்று விடுவேன்! அவ்வளவு பலம் எனக்கு!

ஒரு நாள் தூக்கம் வந்தது; கண்ணை மூடினேன். யாரோ 'தொப் தொப்' என்று என் மேலே குதித்தது தெரிந்தது. கண்ணைப் பாதி திறந்தேன் ஒரு சுண்டெலி! அப்படியே அதைப் பிடித்தேன்.

"என் தூக்கத்தைக் கெடுத்த பயல் நீதானா?" என்று கேட்டேன். "மஹாராஜா! மன்னிக்க வேண்டும், தெரியாமல் செய்துவிட்டேன், காப்பாற்

றுங்கள்!" என்றது சுண்டெலி. "ஓடிப்போ, பயலே!" என்று அதை விட்டுவிட்டேன்.

"மஹாராஜா! வந்தனம்! உங்களுக்குப் பதில் உபகாரம் அவசியம் செய்வேன்" என்றது சுண்டெலி. என் வால் பட்டாலே போதும், சுண்டெலி நசுங்கிச் செத்துப் போகும். இதுவா எனக்கு ஆபத்தில் உதவி செய்யமுடியும்?

## பயிற்சி

1. மௌனமாகப் படி; பொருத்தமான வாக்கியங்களைப் பொறுக்கி எழுது:—

   சிங்கம் சுண்டெலியைவிடச் சிறியது.

   சிங்கம் யானையைக்கூடக் கொன்றுவிடும்.

   சுண்டெலியின் தூக்கத்தைக் கெடுத்தது சிங்கம்.

   யானையை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம்.

   சிங்கத்தைப் பார்க்காதவர் ஒருவரும் இல்லை.

   பூனை சுண்டெலியைக் கொன்று தின்னும்.

2. கீழ்க்கண்ட வாக்கியங்களில் காலியிடங்களை நிரப்பி எழுது:—

| | | | |
|---|---|---|---|
| நான் | என் | கண்ணை | மூடினேன். |
| நீ | ............ | ............ | ............ |
| ராமன் | ............ | ............ | ............ |
| சீதை | ............ | ............ | ............ |
| அப்பா | ............ | ............ | ............ |

| | | | |
|---|---|---|---|
| அம்மா | ............ | ............ | ............ |
| நாங்கள் | ............ | ............ | ............ |
| நீர் | ............ | ............ | ............ |
| நீங்கள் | ............ | ............ | ............ |
| அவர்கள் | ............ | ............ | ............ |
| சிங்கம் | ............ | ............ | ............ |
| பசுக்கள் | ............ | ............ | ............ |

**3. வாக்கியங்கள் அமைத்து எழுது :—**

| | | |
|---|---|---|
| நான் | பாடம்<br>கதை<br>தமிழ் | படிக்கிறேன்.<br>எழுதுகிறேன். |

| | | |
|---|---|---|
| சிங்கம்<br>சுண்டெலி<br>பூனை<br>யானை | காட்டில்<br>வீட்டில் | வசிக்கும். |

# பாடம் 8

## சிங்கம் பேசுகிறது-2

அப்பா! பிழைத்தேன்! தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்! ஒரு மானைப் பிடிக்கத் தாவினேன். காலில் ஏதோ சிக்கியது. காட்டுக் கொடி போல் இருந்தது. பார்த்தால், காட்டுக்கொடியல்ல; கயிறு! நாலு காலிலும் கயிறு! இழுத்தேன், உருண்டேன், புரண்டேன், கர்ஜித்தேன். காடே நடுங்கிற்று. ஊஹூம்! ஒன்றும் பலிக்கவில்லை. வேடன் விரித்திருந்த வலையில் வகையாகச் சிக்கிக் கொண்டுவிட்டேன்.

நடு ராத்திரியும் ஆயிற்று. "ஐயோ! பொழுது விடிந்ததும் வேடன் வருவானே, நம்மைக் கொன்று விடுவானே!" இப்படி நினைக்கும்போதே என் உயிர் போவதுபோல் இருந்தது.•



"கொரக், கொரக், கொரக்! கொரக், கொரக், கொரக்!" என்னைக் கட்டியிருந்த கயிறு அத்தனையும் யாரோ பல்லால் கடித்து அறுத்துப்போட்டது தெரிந்தது. அப்பா! போன உயிர் வந்தது! எழுந்து நின்றேன். என் உயிரைக் காப்பாற்றிய இந்தச் சின்னச் சுண்டெலியைப் பார்க்க, எனக்கு இப்போது எப்படி இருக்கும், தம்பீ!

## பயிற்சி

1. சிங்கத்தின் கதையை இரண்டு பிள்ளைகள் நடித்துக் காட்டலாம். அப்படி நடிக்கும்பொழுது, சிங்கத்தின் குரல் கம்பீரமாகவும் சுண்டெலியின் குரல் மெல்லிய கீச்சுக் குரலாகவும் இருக்கவேண்டும்.

2. மௌனமாகப் படி ; கீழே கண்டபடி வாக்கியங்களை மாற்றி அமைத்து எழுது :—

    காடே நடுங்கிற்று.

    காடே நடுங்கும்.

    1. தூக்கம் வந்தது.
    2. கண்ணை மூடினேன்.
    3. கண்ணைத் திறந்தேன்.
    4. சுண்டெலியைப் பிடித்தேன்.
    5. அதை விட்டுவிட்டேன்.
    6. மானைப் பிடிக்கத் தாவினேன்.
    7. காட்டுக் கொடிபோல் இருந்தது.
    8. நடு ராத்திரி ஆயிற்று.
    9. எழுந்து நின்றேன்.
    10. சுண்டெலியைப் பார்த்தேன்.

# பாடம் 9

## மாதங்கள்

## (விளையாட்டு)

கண்ணன் : எனக்குப் பிடித்தது சித்திரை மாதம்,
சித்திரையில் வரும் தேர்த் திருவிழா,
எங்கள் ஊரில் வெண்ணெய்த்தாழி,
பலாப்பழம் மாம்பழம் நிறையக் கிடைக்கும்!

வரதன் : எனக்குப் பிடித்தது வைகாசி,
கோவில் திருவிழா மேலும் உண்டு,
எங்கள் ஊரில் கருட சேவை,
மலை மலையாக மாம்பழம் தின்பேன்!

கல்யாணி : ஆனி மாதத்தின் அழகே தனிதான்!
தெருவுக்கு இரண்டு திருமணம் உண்டு,
திரும்பும் இடமெல்லாம் மேளமும் தாளமும்,
வடை பாயசத்துடன் விருந்து கிடைக்கும்!

ஆண்டாள் : ஆடிப் பதினெட்டு ஆற்றில் வெள்ளம்,
வகை வகையாகச் சாதமும் வடாமும்,
ஆண்டாளுக்குத் திருக்கல்யாணம்,
சீடை முறுக்குடன் கண்ணன் பிறப்பு!

மீனாக்ஷி : ஆடியில் வரும் அக் கண்ணன் பிறப்பு,
ஆவணி மாதம் வருவதும் உண்டு ;
ஆவணி, மதுரையில் பிட்டுத் திரு நாள்,
வெல்லக் கொழுக்கட்டை விநாயகர் தருவார் !

ஸரஸ்வதி : புரட்டாசியில் வரும் பொம்மைக் கொலுக்கள்,
விதம் விதமான சுண்டலும் கிடைக்கும்,
ஆயுத பூஜை, புத்தக பூஜை,
அடுத்த நாள் முதல் என் அம்பி படிப்பான் !

கந்தன் : ஐப்பசி அடை மழை, கடைத்தெரு கூட்டம்,
பட்டாசு வாணம் மத்தாப்பு,
பட்டாடை பக்ஷணம் தீபாவளி,
ஆறு நாள் கழித்துச் சூர ஸம்ஹாரம்!

அண்ணாமலை : கார்த்திகை வந்தால் சுடர்விடும் விளக்கு,
வீட்டில் வாசலில் கோவிலில் மலையில்,
திரும்பும் இடமெல்லாம் அகல்களின் ஜோதி,
அவல் பொரி அப்பம் அளவில்லை எனக்கு !

ரங்கன்,
நடராஜன் : மார்கழி மாதம் ஏகாதசி விழா,
சிதம்பரத்தில் ஆதிரை தரிசனம்,
காலையில் பஜனை, சுடச்சுடப் பொங்கல்,
கிறிஸ்மஸ் பண்டிகை, அப்போது லீவு!

கோவிந்தன் : தை பிறந்ததும் வழி பிறந்திடும்,
சர்க்கரைப் பொங்கல் கரும்பு கணக்கில்லை,
மாட்டுப் பொங்கல் ஜல்லிக்கட்டு,
பூசத் திருவிழா புறப்பாடு!

பரமசிவன் : மாசியில் வரும் மஹா சிவராத்திரி,
பனியும் குளிரும் பனிச்சென்றகலும்,
பனிரண்டு ஆண்டிற்கு ஒரு முறை உண்டு
கும்பகோணத்தில் மஹாமக உற்சவம்!

ஸாவித்திரி,
கல்பகம் : பங்குனி உத்திரம் பால் காவடியுடன்,
மயிலாப்பூரில் அறுபத்து மூவர்,
காமன் பண்டிகை, காரடை நோன்பு,
வேப்பு பூத்திடும், மாம்பூ மலர்ந்திடும்!

## பாடம் 10




# நம் நாடு

நாம் வசிக்கும் ஊர் சிறிதாயிருந்தால் அது கிராமம்; பெரிதாயிருந்தால் பட்டணம். நம் ஊரிலிருந்து நாம் எல்லா ஊருக்கும் போகலாம். அப்படிப் போகச் சாலைகள் உண்டு; வண்டிகளும் உண்டு.

சூரியன் உதிக்கும் திசை கிழக்கு என்று நமக்குத் தெரியும். நாம் கிழக்கே போய்க்கொண்டே இருந்தால் சமுத்திரக்கரையை அடைவோம். கிழக்குப் பார்த்து நாம் நிற்கும்போது நம் வலது கைப்புறம் தெற்கு. நாம் தெற்கே போய்க்கொண்டே இருந்தால் அங்கேயும் சமுத்திரக்கரையை அடைவோம்.

கிழக்குப் பார்த்து நாம் நிற்கும்போது நம் இடது கைப்புறம் வடக்கு. நாம் வடக்கே போய்க்

கொண்டே இருந்தால் தெலுங்கு தேசத்தை அடைவோம். சூரியன் அஸ்தமிக்கும் திசை மேற்கு. நாம் மேற்கே போய்க் கொண்டே இருந்தால் மலைப் பிரதேசத்தை அடைவோம். அங்கே ஒரு பக்கம் மலையாளம், ஒரு பக்கம் கன்னடம்.




நாம் வசிக்கும் தமிழ் நாடு நம் தாய் நாட்டின் ஒரு பாகம். நம் தாய் நாடு இந்தியா. அதையே பாரத தேசம் என்றும் சொல்வார்கள்.

### பயிற்சி

1. மௌனமாகப் படி; பொருத்தமான முழு வாக்கியங்களாக எழுது :—
   1. ஊர் சிறிதாயிருந்தால் அது .........
   2. ஊர் பெரிதாயிருந்தால் அது .........
   3. நாம் கிழக்கே போய்க்கொண்டே இருந்தால் .........
   4. நாம் தெற்கே போய்க்கொண்டே இருந்தால் .........
   5. நாம் வடக்கே போய்க்கொண்டே இருந்தால் .........
   6. நாம் மேற்கே போய்க்கொண்டே இருந்தால் .........
   7. சூரியன் உதிக்கும் திசை .........
   8. சூரியன் அஸ்தமிக்கும் திசை .........
   9. நம் தாய் நாடு.........அல்லது.........
2. கீழ்க்கண்ட சொற்களின் எதிர்ச் சொற்களை எழுது :—
   வெளுப்பு, கிழக்கு, தெற்கு, பகல், சிறிது, உதயம், பட்டணம்.

# பாடம் 11

## பாப்பாப் பாட்டு

[இந்த அழகிய பாட்டை பிள்ளைகள் அழகாகப் பாடக் கற்றுக்கொள்ள வேண்டும். பாரதி யாரைப் பற்றிய ரஸமான விஷயங்களைச் சிறுவர்களுக்கு உபாத்தியாயர் சொல்லவேண்டும்.]

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு,
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!

வேதம் உடையதிந்த நாடு—நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு,
சேதம் இல்லாத ஹிந்துஸ்தானம்—இதைத்
தெய்வம் என்று கும்பிடடி பாப்பா!

—பாரதியார்

# பாடம் 12



## பட்டணங்கள்

தமிழ் நாட்டின் கிழக்கே சமுத்திரம் இருக்கிறதல்லவா? அந்தச் சமுத்திரக் கரையில் பல பட்டணங்கள் உண்டு. தமிழ்நாட்டின் பெரிய பட்டணம் மதராஸ். சென்னைப்பட்டணம் என்றும் அதைச் சொல்வார்கள்.

சென்னையிலிருந்து சமுத்திரக் கரையோடு தெற்கே வந்தால் இன்னும் என்னென்ன பட்டணங்கள் பார்க்கலாம்? புதுச்சேரி, கடலூர், காரைக்கால், நாகப்பட்டணம், ராமேசுவரம், தூத்துக்குடி.

சமுத்திரக்கரையில் இல்லாமல் உள் நாட்டிலும் பட்டணங்கள் உண்டு. செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர்; சிதம்பரம், விருத்தாசலம். சேலம்; தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர்;

திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி; இப்படி எத்தனையோ பட்டணங்கள்!

சென்னை என்பதே ஒரு நாடு; அதன் முக்கிய பட்டணம் சென்னை. சென்னையைப்போலப் பல நாடுகள் சேர்ந்தது இந்தியா. இந்தியாவில் உள்ள வேறு இரு பட்டணங்கள் சென்னையைவிட மிகப் பெரியவை. அவை பம்பாயும் கல்கத்தாவும். இந்தியா முழுவதற்கும் முக்கிய பட்டணம் தில்லி. பம்பாய் கடற்கரைத் துறைமுகம்; கல்கத்தா ஆற்றங் கரைத் துறைமுகம்; தில்லி உள் நாட்டுப் பட்டணம்.

### பயிற்சி

இந்தப் பாடத்தில் வரும் பட்டணங்கள் எத்தனை?
அவைகளின் பெயர்களை எழுத்துவரிசை தவறாமல் எழுது.



# பாடம் 13

## ஆறு

ஓடும் நீரே, ஓடும் நீரே,
உன் பெயர் என்ன, ஓடும் நீரே?
என் பெயர் ஆறு, எந்தன் தம்பீ!

ஆறே ஆறே, அழகிய ஆறே,
அப்பா அம்மா உண்டோ உனக்கு?

காயும் சூரியன் எந்தன் அப்பா,
கடல் நீர் எல்லாம் எந்றன் அம்மா!

ஆறே ஆறே, அழகிய ஆறே,
எங்கு நீ பிறந்தாய், எந்றன் ஆறே?

மலையின் உச்சியில் வந்தது மேகம்,
மேகம் தந்த மழையுடன் பிறந்தேன்,
மழையாய்ப் பிறந்தேன் அம் மலையின் சரிவில்,

ஆறே ஆறே, அழகிய ஆறே,
அம்மழை நீர் எப்படி ஆறாயிற்று?

சின்னஞ்சிறு மழைத் துளிகள் சேர்ந்து,
ஓடும் நீராய் உருண்டு வந்தன;
ஓடும் கால்கள் ஒன்றாய்ச் சேர்ந்து,
அகலம் ஆகி நான் ஆறென்றானேன்!

# பாடம் 14




## தமிழ் நாட்டு ஆறுகள்

தமிழ் நாட்டின் மேற்கில் உள்ளது மலைப் பிரதேசம். அந்த மலைப்பிரதேசத்தில் பெய்யும் மழை தாழ்நிலத்திற்கு ஓடிவரும். கிழக்கிலுள்ள தாழ்நிலம்தான் தமிழ் நாடு. மழை நீர் அங்கங்கே ஒன்றாகச் சேர்ந்து ஆறு ஆகிறது. தமிழ் நாட்டில் ஆறுகள் அநேகம்.

அந்த ஆறுகளுள் ஐந்து முக்கியமானவை. வடக்கில் வேலூருக்கு அருகில் பாய்ந்து வருவது பாலாறு. அது காஞ்சிபுரத்துக்கும் செங்கல்பட்டுக்கும் தெற்கில் பாய்கிறது. பெண்ணையாறு கடலூருக்கு அருகில் கடலில் கலக்கிறது. அதன் கரையில் உள்ள ஊர்களில் திருக்கோவிலூர் என்பது ஒன்று.

தமிழ் நாட்டு ஆறுகளுள் பெரியது காவேரி. காவேரிக்கரைப் பட்டணங்களுள் பெரியது திருச்சிராப்பள்ளி. அதன் அக்கரையில் உள்ள க்ஷேத்திரம் ஸ்ரீரங்கம். மஹாமக உற்சவம் நடக்கும் கும்பகோணமும் ஒரு காவேரிக்கரைப் பட்டணம்.

தமிழ் நாட்டுப் பட்டணங்களுள் மதுரை மிகப் புகழ்பெற்றது. அது வைகை ஆற்றங்கரையில் அமைந்தது. வைகை ராமேசுவரத்திற்கு அருகில் கடலில் கலக்கிறது. தாமிரபரணிக் கரையில் உள்ளது திருநெல்வேலி என்னும் பட்டணம். தாமிரபரணி நீர் வீழ்ச்சிகள் புகழ் பெற்றவை.

தமிழ் நாட்டு ஆறுகளுள் காவேரி ஒரு புண்ணிய நதி. இந்திய ஆறுகளுள் ஒரு புண்ணிய நதி கங்கை.

## பயிற்சி

1. மௌனமாக வாசி; பொருத்தமான வாக்கியங்கள் அமைத்து எழுது :—

| | |
|---|---|
| சென்னை | ஆற்றங்கரைப் பட்டணம். |
| தூத்துக்குடி | சமுத்திரக்கரைப் பட்டணம். |
| தில்லி | உள்நாட்டுப் பட்டணம். |
| திருச்சிராப்பள்ளி | பெரிய பட்டணம். |
| தஞ்சாவூர் | சிறிய பட்டணம். |
| கும்பகோணம் | |
| மதுரை | |
| திருநெல்வேலி | |

# பாடம் 15

## பக்ஷணம்

இட்டிலி தோசை உப்புமா,
சட்டினி சாம்பார் பஜ்ஜி,
மெதுவடை தயிர் வடை மசால்வடை,
பூரி போண்டா பக்கவடா !

உருளைக்கிழங்கு ஓமப்பொடி,
கடலைச் சுண்டல் காராபூந்தி,
காரா சேவை சேமியா !

மோஹன் லாடு குஞ்சாலாடு,
ரவாலாடு பாதாம்கீர்,
தேங்காய்ப் பர்பி பதிர்ப்பேணி,
தில்லி பாதுஷா குலாப்ஜான் !

ஜிலேபி ஜாங்கிரி மைசூர் பாக்,
கோதுமை அல்வா, வாதுமை அல்வா,
கல்கத்தா ரஸகுல்லா !

### கேள்விகள்

1. நீ என்னென்ன பக்ஷணங்கள் சாப்பிட்டிருக்கிறாய்?
2. உனக்கு மிகவும் பிடித்த பக்ஷணங்கள் எவை?
3. இந்தப் பாடத்தில் வந்துள்ள பக்ஷணங்களின் பெயர்களை எழுத்து வரிசைக்கிரமத்தில் எழுது.

# பாடம் 16

## சுதந்திர வாழ்க்கை-1

நகரம் என்பது மிகப் பெரிய பட்டணம். அங்கே பெரிய பெரிய தெருக்கள், வீடுகள் எல்லாம் உண்டு. ஒரு நகரத்தில் ஒரு பணக்காரர் இருந்தார். அப் பணக்காரர் வீட்டில் ஓர் எலி இருந்தது. அதற்கு அங்கே தீனிக்குப் பஞ்சமா ? வயிறு நிறையத் தின்று அது கொழுத்திருந்தது.

ஒரு நாள் இந்த எலி உலாவப் போயிற்று. அங்கே ஒரு வயலில் தன் தம்பியைப் பார்த்தது. தம்பி எலி கிராமத்தில், நாட்டுப் புறத்தில், வளர்ந்து வந்தது. "இப்படியே என் வீட்டுக்கு வந்துவிட்டுப்போ, அண்ணா!" என்றது அந்த நாட்டுப்புறஎலி.



நகரத்து எலியை உபசரித்து அதனால் என்ன கொடுக்க முடியும்? தேங்காய்க் கொட்டாங்கச்சி, வாழைப்பழத் தோல், குப்பையில் கிடந்த நெல்— இவ்வளவுதான். மரியாதைக்காக நகரத்து எலி கொஞ்சம் சாப்பிட்டது.

அப்புறம் அது சொல்லியது, "தம்பீ! பஞ்சத்தில் அடிபட்டு இப்படித் துரும்பாக இளைத்துப் போய்விட்டாயே. என்னோடு சௌக்கியமாகக் கொஞ்ச நாள் என் வீட்டில் வந்து இரு; உன் உடம்பு தேறிவிடும்," என்றது. அண்ணா சொன்ன வார்த்தையைத் தட்ட முடியுமா? தம்பி எலி அதனுடன் புறப்பட்டுப் போயிற்று.

## பயிற்சி

மௌனமாகப் படித்து, சரியான வாக்கியங்களைப் பொறுக்கி எழுது:—

1. கிழக்கு நோக்கி நின்றால், இடது பக்கம் தெற்கு.
2. பம்பாய் சமுத்திரக்கரைப் பட்டணம்.
3. வேலூர் மதுரையைவிடப் பெரிய பட்டணம்.
4. காவேரி ஆறு தமிழ்நாட்டு ஆறுகளுள் பெரியது.
5. சென்னை கல்கத்தாவைவிடச் சிறிய பட்டணம்.
6. தமிழ்நாட்டில் ஆறுகள் இல்லை.
7. இந்தியா முழுவதற்கும் முக்கிய பட்டணம் தில்லி.

# பாடம் 17

## சுதந்திர வாழ்க்கை-2

அலமாரியில்தான் எத்தனை விதம்விதமான பக்ஷணங்கள்! நாட்டுப்புற எலிக்குப் பார்க்கப் பார்க்க ஆச்சரியம் தாங்கவில்லை. முதலில், தரையில் சிதறிக் கிடந்த ஒரு பக்ஷணத்துண்டை அது கொரிக்கப் போயிற்று, "மியாவ்!" —பூனையின் குரல் அது! அவ்வளவுதான்! சரேல் என்று நாட்டுப்புற எலி ஓடி ஒளிந்தது. அதன் உடம்பு நடுங்கியது; மார்பு படபட என்று அடித்துக்கொண்டது.

வெகுநேரம் கழித்து நாட்டுப்புற எலி வெளியில் வந்தது. கதவு படீர் என்று திறந்தது. அதோ, வீட்டுக்கார அம்மாள்! பயம்! நகரத்து



எலி சரசர என்று ஓடி வளைக்குள் நுழைந்து கொண்டது.

நாட்டுப்புற எலி சொல்லியது: "அண்ணா! இங்கே சாப்பாடு நன்றாக இருக்கிறது, நிறையவும் இருக்கிறது. ஆனால், எனக்கு இங்கே, சுதந்திரமே இல்லை. எந்த நிமிஷம் உயிர் போய்விடுமோ என்று திகில். எனக்கு என் வீட்டில் கிடைப்பது எளிய உணவுதான். ஆனால், எனக்கு அங்கே பயம் இல்லை; நிம்மதியாக இருந்துவருகிறேன். அதுவே எனக்குப் போதும்!" நகரத்து எலி தன் தம்பியிடம், "சரி, போய் வா," என்றது.

நாட்டுப்புற எலி சொன்னது சரிதானே?

## பயிற்சி

**1. மௌனமாக வாசித்து, முழு வாக்கியங்களாக அமைத்து எழுது:—**

1. நகரம் என்பது............பட்டணம்.
2. நகர எலி............கொழுத்திருந்தது.
3. ஒரு நாள் இந்த எலி............போயிற்று.
4. ............காக நகரத்து எலி கொஞ்சம் சாப்பிட்டது.
5. 'உன் உடம்பு............' என்றது.
6. நாட்டுப்புற எலிக்குப் பார்க்கப் பார்க்க............
7. ............என்று ஓடி ஒளிந்தது.
8. கதவு............என்று திறந்தது.
9. எந்த நிமிஷம்............திகில்.
10. எனக்குக் கிடைப்பது............உணவுதான்; ஆனால் ............இல்லை.

## பாடம் 18



# பொறியில் சிக்கிய சுண்டெலி

அம்மணி, நான் ஒரு சுண்டெலி அம்மணி!
அண்டை வீட்டில் வசிப்பவன் அம்மணி!
தின்ன உணவின்றித் தவிப்பவன் அம்மணி!
தீங்கெதுவும் செய்யத் தெரியாதம்மணி!

கொட்டாங்கச்சியைக் கொரித்தேன் அம்மணி!
கொஞ்சம்தான் அது, உமக்கொரு கும்பிடு அம்மணி!

கொல்லவா வந்திர்? வேண்டாம் அம்மணி!
கோடி புண்ணியம் காத்திடும் அம்மணி!

என் இளம் மனைவி ஏங்குவாள் அம்மணி!
ஐந்து குழந்தையும் அலறும் அம்மணி!
காலைமுதல் கடும் பட்டினி அம்மணி!
கருணை காட்டிக் காத்திடும் அம்மணி!

தங்கள் கடைக்கண் தயவு அம்மணி!
திறந்த இடுக்கு இது போதும் அம்மணி!
திரும்பி இவ்வழி வர மாட்டேன் அம்மணி!
தப்பினேன், தண்டம் தண்டம் அம்மணி!

# பாடம் 19

# நல்ல நண்பர்கள் (நாடகம்)

## (i) மரத்தடி

எலி: காக்கையாரே, காக்கையாரே, நம் மானை கண்டீரோ?

ஆமை: நேற்று மாலை மேயப் போனவர் திரும்பக் காணோமே!

எலி: மானைப்போல நண்பர் நமக்கு யாரும் இல்லையே!

ஆமை: திரும்பவில்லை என்றதும் எனக்குத் தூக்கம் வரவில்லை.

எலி: வேடிக்கையாய்ப் பேசி நம்மை விளையாடச் செய்வார்.

ஆமை: அவர் செத்துப் போனாற்போல ஒரு சொப்பனங் கண்டேன்.



எலி : தாவிக் குதிப்பார், தலையை ஆட்டுவார், சிரிக்கச் செய்வாரே !

ஆமை : என் நல்ல நண்பர் மானை என்று பார்க்கப் போகிறேன் ?

எலி : வாய் திறந்தொரு வார்த்தை சொல்வீர், காக்கையாரே !

காக்கை : கண்ணாலே நான் கண்டதெல்லாம் சொல்லத்தான் வந்தேன்.

எலி : எங்கே தேடினீர், என்ன கண்டீர், உடனே சொல்லுவீர்.

ஆமை : இருக்கின்றாரோ, போய்விட்டாரோ, தெரியவேண்டுமே !

காக்கை : வேடன் விரித்த வலையில் அவன் மாட்டிக் கொண்டானே, அவனை விடுவிக்கும் உபாயம் ஒன்றும் தோன்றவில்லையே !

எலி : ஜல்தி ஜல்தி போகவேண்டும் அங்கே— வழியைக் காட்டுவீர் !

காக்கை : இந்தப்பக்கம், இந்தப்பக்கம், இதோ கிட்டத்தான் !

எலி : வலையைக் கடித்து மானை உடனே விடுதலை செய்வேன்.

காக்கை : ஆமையாரே, பின்னால்வாரும், முன்னால் போகிறோம்.

## (ii) வலையின் அருகில்

மான் : காக்கையாரே, எலியாரே, உமக்குக் கோடி வந்தனம் ! சாக இருந்தேன், பிழைத்தெழுந்தேன் உங்கள் தயவினால் !



காக்கை: ஓடு, ஓடு, ஓடு, மானே! வேடன் வருகின்றான், கோபமாகத் தடி எடுத்து விரைந்து வருகின்றான்!

வேடன்: மான் எப்படித் தப்பித்தது, மாயமா இது? வலை முழுதும் சிதறிவிட்டது துண்டு துண்டாக! காக்கை ஒன்று மேலே பறக்கக் கண்டுகொண்டேனே, ஒரு எலியும் இங்கு ஓடிற்று, இது எலியின் வேலைதான்!

ஆஹா பார், என் அதிருஷ்டம்! இங்கோர் ஆமை வந்தது, தடியில் கட்டித் தூக்கிப்போய் அதைச் சமைத்துத் தின்பேனே!

எலி: காக்கையாரே, காக்கையாரே, கஷ்டம் வந்ததே. ஆமையார் அவ் வேடன் கையில் அகப்பட்டுக்கொண்டாரே!

மான் : உயிரை எல்லாம் என்மேல் ஆமை வைத்திருந்ததே, என்னைக் காக்க வந்த ஆமை இப்படி ஆகலாகுமோ ?

காக்கை : தப்புவிப்போம் அவரை, ஒரு தந்திரம் செய்வோம்.

மான் : ஓடிப்போய் நான் வேடன் கையில் அகப்பட்டுக்கொள்வேன்.

காக்கை : செத்தாற்போலப் படுத்திரு நீ, உன் கண்ணைக் குத்துவேன்.

எலி : என்னால் ஆன உதவி இன்றும் என்றும் செய்வேனே.

## (iii) குளத்தங்கரை

வேடன் : குளத்தங்கரையில் படுத்திருப்பது அந்த மான்தானே ? காக்கை அதன் கண்ணைக் குத்த அது பார்த்திருக்காதே ! ஆடவில்லை அசையவில்லை ; சரி, செத்துப் போயிற்று ! ஆமையோடு மானும்



கிடைத்தால் அதிருஷ்டம்தான் இன்று! குளத்தங்கரையில் தடியை வைப்பேன், தண்ணீர் குடிப்பேன்: மானை மெதுவாய்க் கட்டித்தூக்கலாம், அவசரம் இல்லை!

எலி: ஆமையாரே, ஆமையாரே, வேடன் இங் கில்லை, தண்ணீர் குடித்துத் தாகம் தீர்த்து மெதுவாய்ப் போகின்றான். உம் மைக்கட்டிய கயிற்றை இதோ அறுத்து விட்டேனே, ஓடிப்போய் இக் குளத்து நீரில் ஒளிந்துகொள்ளுமே!

வேடன்: இங்கேயும் வந்தோரெலி ஓடிப்போயிற்று, மானின் காலைக் கடித்துவிட்டு ஓடிப் போயிற்று, கையைத் தட்டினேன் காக் கையும்தான் பறந்து போயிற்று. மானெங்கே, அது மாயமாக மறைந்து விட்டதே! செத்தாற்போலப் படுத் திருந்தது பாசாங்குதானோ? ஏமாந் தாலும் பாதகம் இல்லை, எனக்கு ஆமையே போதும்! எங்கே இந்தக் கடியில் எந்தன் ஆமை காணோமே! நல்ல வேலை செய்த தெலி இந்த இடத்திலும்! காக் கை, எலி, ஆமை, மான்—இவற் றின் கூட்டுத் தந்திரம்! இரண்டு கடவை ஏமாந்திட்ட மண்டு ஆனேனே!



## பயிற்சி

1. இந்த நாடகத்தை வகுப்புப் பிள்ளைகள் நடித்துக் காட்டவும்.

மௌனமாக வாசித்து, சரியான வாக்கியங்கள் அமைத்து எழுது :—

| | |
|---|---|
| எலி<br>ஆமை<br>காக்கை<br>மான்<br>வேடன் | தாவிக் குதிக்கும்.<br>வலையில் மாட்டிக்கொண்டது.<br>வலையைக் கடித்து மானை விடுதலை செய்தது.<br>தடி எடுத்து ஓடி வந்தான்.<br>மேலே பறந்தது.<br>வேடன் கையில் அகப்பட்டுக்கொண்டது.<br>மானின் கண்ணைக் குத்திற்று.<br>செத்தாற்போலப் படுத்திருந்தது.<br>தண்ணீர் குடிக்கப் போனான்.<br>குளத்து நீரில் ஒளிந்துகொண்டது. |

> திட்டைச் சேரி எட்டுத்திடல்,
> திடல் ஒன்றுக்கு எட்டுப்பனை,
> பனை ஒன்றுக்கு எட்டுக்குலை,
> குலை ஒன்றுக்கு எட்டுக்காய்,
> மொத்தம் எத்தனைக்காய்?

# பாடம் 20



## சத்தம் போடாதே!

பாப்பா அங்கே தொட்டிலில் தூங்கும்,
சத்தம் போடாதே!
சத்தம் போட்டால் அதன் தூக்கம் கலையும்,
சத்தம் போடாதே!
தூக்கத்தில் பாப்பா சொப்பனம் காணும்,
சத்தம் போடாதே!
சொப்பனத்தில் நம் கண்ணனைப் பார்க்கும்,
சத்தம் போடாதே!
கண்ணன் அதற்குச் சிரிப்புக் காட்டுவான்,
சத்தம் போடாதே!
சிரிப்புக் கலைந்து அழ ஆரம்பிக்கும்,
சத்தம் போடாதே!
அழ ஆரம்பித்தால் அழகாயிராது,
சத்தம் போடாதே!
தூக்கத்தில் பாப்பா சிரிப்பதைப் பார்த்திரு,
சத்தம் போடாதே!

# பாடம் 21

## 'திராக்ஷை புளிக்கும்'

### (படப் பாடம்)

[ஒவ்வொரு படத்தின் எதிரில் உள்ள வாக்கியங்களை மௌனமாக வாசித்துப்பார்; பிறகு, பொருத்தமான வாக்கியத்தைப் பொறுக்கி எழுது.]

1. ஒரு குதிரை பாய்ந்து கொண்டிருக்கிறது.
2. ஒரு யானை நடந்து போகிறது.
3. மேலே தொங்கும் திராக்ஷையை ஒரு நரி ஆசையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.





1. குதிரை தன்மேல் சவாரி செய்யும் மனிதனைத் தள்ளிப் போடுகிறது.
2. திராக்ஷையை நோக்கி நரி குதித்துப் பார்க்கிறது.
3. யானை தும்பிக்கையை வீசுகிறது.

1. திராக்ஷையை நோக்கி மீண்டும் மீண்டும் நரி குதிக்கிறது; ஆனால் திராக்ஷை எட்டவில்லை.



2. குதிரை புல் மேய்ந்து கொண்டிருக்கிறது.
3. யானை தரையில் கிடக்கும் துரும்பைத் தும்பிக்கையால் தூக்குகிறது.

1. யானை ஒரு பையனை நோக்கிப் பாய்கிறது.
2. "சீ! இந்தத் திராக்ஷை புளிக்கும்; இது எனக்கு வேண்டாம்!" என்று சொல்லிக் கொண்டு நரி போய்விடுகிறது.



3. குதிரைமீது இரண்டு பையன்கள் சவாரி செய்து கொண்டிருக்கிறார்கள்.

### பயிற்சி

**இந்தக் கதையை உன் சிறு தம்பிக்குச் சொல்லு.**

# பாடம் 22



## சிங்கமும் எருதுகளும் (நாடகம்)

### (i) சிங்கமும் நரியும்

**சிங்கம்:** என்னால் முன்போல் ஓட முடியவில்லை; தேகத்திலும் தெம்பு இல்லை. என்ன செய்யலாம், மந்திரி?

**நரி:** யோசனை சொல்ல நான் இருக்கிறேன். பலத்தால் முடியாதது புத்தியால் முடியும்.

**சிங்கம்:** அவமானம் எனக்கு இன்றைக்கு. கொழுத்த காளைகள் நான்கு பார்த்தேன். அவற்றின் மீது தாவிப் பாய்ந்தேன்.

**நரி:** பலே! அடித்த மாடுகள் எத்தனை? தின்ற மாடுகள் எத்தனை? எனக்கு ஏதேனும் மிச்சம் இருக்குமா?

சிங்கம்: அவமானம் என்று அதைத்தான் சொன்னேன். மாடுகள் நான்கும் முட்ட வந்தன. உயிர் தப்பியது; ஓடியே வந்தேன்.

நரி: மாட்டைக் கண்டா மஹாராஜா பயந்தார்?

சிங்கம்: நான்கு மாடுகளின் மட்டுக் கொம்புகள் ஈட்டி போல் பாய்ந்தால் எப்படி இருக்கும்?



நரி: நான்கு மாடுகளும் சேர்ந்தா வந்தன?

சிங்கம்: ஒற்றை மாடானால் ஒரு நொடியில் கொல்வேன். மாடுகள் நான்கும் பிரிவதே இல்லை; அத்தனை ஒற்றுமை அம்மாடுகளிடையில்!

நரி: அவற்றைப் பிரிக்க என்னால் முடியும். என் தந்திரத்தை நீர் மெச்சப்போகிறீர்!

# (ii) நரியும் எருதும்



நரி: காளையாரே! என்ன யோசனை செய்கிறீர்?

எருது: யோசனை ஒன்றும் செய்யவில்லை. தண்ணீர் குடிக்கும் அண்ணன்மார்கள் திரும்பு மட்டும் காத்திருக்கிறேன்.

நரி: நீர் கோழை என்று உம் அண்ணன்மார்கள் சொல்லித் திரிவது என் காதில் விழுந்தது.

எருது: நானா கோழை? என்னை எதிர்க்க யாரால் முடியும் இந்தக்காட்டில்?

நரி: உம்மைக் காத்து ரக்ஷிப்பதாய் உம் அண்ணன்மார்கள் சொல்கின்றார்களே!

எருது: என்னைக் காத்திட என்னால் முடியும். இனி நான் தனியாய்ப் போவேன், தனியே மேய்வேன்.

நரி: ஐயோ, வேண்டாம்! சிங்கம் வந்தால் சீறிப் பாயும்; செத்துப் போவீர்!

எருது: நேற்றுக்கூடச் சண்டை செய்து சிங்கம் தோற்றுப் போயிற்று. சிங்கம் வந்தால் என் கொம்பால் குத்தித் தூக்கிப் போடுவேன்.

நரி: தைரியம் இருந்தால் பிழைத்துக் கொள்வீர்; வேறென்ன சொல்வேன்?

எருது: தைரியம் உண்டு, தெம்பும் உண்டு; யாரைப் பார்த்தும் பயமில்லை. தனியே இருந்து, தனியே மேய்ந்து, தனியே சுகமாய் வாழ்ந்திடுவேன்!

## (iii) சிங்கமும் நரியும்

சிங்கம்: உன்னைப்போலப் புத்திசாலி உலகில் இல்லை, உண்மைதான்! மாதம் முழுதும் மாட்டைத் தின்று மகிழ்ந்திருந்தோமே! மாட்டைப் பிரிக்கத் தந்திரம் நீ செய்ததென்ன, மந்திரி?



நரி: ஒவ்வொரு மாட்டையும் தனியாய்ப் பார்த்து ஓதினேன் அதன் காதினில்; மற்ற மாடுகள் மறைவில் அதனை மதிப்பதில்லை என்றேன். புத்தி கெட்ட மாட்டுக்கப்போது ரோசம் வந்தது. தன்னந் தனியே வாழ்வதென்று திட்டம் போட்டது.

சிங்கம்: ஒற்றுமையாய் இருந்தபோது வெற்றி மாட்டுக்கே; ஒற்றுமை குலைந்தபோது வெற்றி நமக்கே!

## பயிற்சி

**1. மௌனமாக வாசித்து, பொருத்தமான வாக்கியங்களை அமைத்துச் சொல்; பிறகு அவைகளை எழுது:—**

| | |
|---|---|
| என்னால் முன்போல் | என்னால் முடியும். |
| மாடுகள் நான்கும் | தனியே மேய்வேன். |
| பலத்தால் முடியாதது | சீறிப் பாயும். |
| அவற்றைப் பிரிக்க | சுகமாய் வாழ்ந்திடுவேன். |
| இனி நான் | வெற்றி நமக்கே. |
| சிங்கம் வந்தால் | வெற்றி மாட்டுக்கே. |
| தைரியம் இருந்தால் | புத்தியால் முடியும். |
| தனியே இருந்து | ஓட முடியவில்லை. |
| ஒற்றுமையாய் இருந்தபோது | முட்ட வந்தன. |
| ஒற்றுமை குலைந்தபோது | பிழைத்துக்கொள்வீர். |

**2. இந்தக் கதையை உன் தம்பிக்குச் சொல்வதுபோல் சொல்லு: பிறகு, அதை எழுது.**

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் — இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்

# பாடம் 23



## பசு

அம்மா! வாசலில் பார், பசுமாடு! வெள்ளை வெளேர் என்றிருக்கிறது அதன் கன்றுக்குட்டி. அதைப் பிடித்து நான் விளையாடலாமா? ஆசையாக இருக்கிறது, அம்மா!

அது துள்ளி ஓடுகிறது; என்னால் பிடிக்க முடியவில்லை. இதோ, அதுவாகவே என்னிடம் வந்துவிட்டது! என்னை அது மோந்து பார்க்கிறது; எனக்குச் சிலுசிலுப்பாய் இருக்கிறது. தொட்டால் அதன் உடம்பு பட்டுப்போல் மிருதுவாக இருக்கிறது, அம்மா!

வாழைப்பழம் கொடுத்தேன்; கன்றுக்குட்டி அதைத் தின்னவில்லை. இன்னும் ஒரு மாதம் போக

வேண்டுமா? இளங்கன்று பால் மாத்திரம்தானா குடிக்கும்? இப்போது அது வயிறு நிரம்பப் பால் குடித்திருக்கிறது.

ஏனம்மா, இந்தக் கன்றுக்குட்டிக்கு அம்மா தானே அந்தப்பசு? அம்மா கூப்பிட்டதும் அது ஓடிவிட்டது, பார்! கன்றுக்குட்டியை எவ்வளவு ஆசையாகப் பசு நக்கிக் கொடுக்கிறது! குழந்தையை அம்மா கொஞ்சுகிறது!

நேற்று நான் கறந்த பாலைக் குடித்துப் பார்த்தேன். இனிப்பாய் இருந்தது, சூடாகவும் இருந்ததம்மா! பாத்திரத்தில் இருந்தது சொட்டுப் பால் தான்; மீதி அத்தனையும் நுரை!

நாளையிலிருந்து ஒவ்வொரு நாளும் கறந்த பாலாகவே எனக்குக் கொஞ்சம் தருகிறாயா, அம்மா?

## பயிற்சி

மௌனமாக வாசித்து முழு வாக்கியங்களாக அமைத்து எழுது :—

1. பசுவின் குழந்தைக்கு........என்று பெயர்.
2. கன்றுக்குட்டி........ஓடுகிறது.
3. கன்றுக்குட்டி என்னை........பார்க்கிறது.
4. அதன் உடம்பு பட்டுப்போல்.........இருக்கிறது.
5. இளங்கன்று......தான் குடிக்கும்.
6. அது வயிறு........குடித்திருக்கிறது.
7. கறந்த பால்.........இருந்தது.

# பாடம் 24

## பசு

புல்லை மேயும் பசு தினமும்
பாலைப் பொழிந்து தரும் நமக்கு;
பாலைக் குடித்தால் பலமுண்டு,
ஆயுள் வளரும், அழகுண்டு. (1)
பாலைக் காய்ச்சிப் பதமாகப்
பக்குவம் செய்தால் தயிராகும்;
தயிரும் சோறும் உண்பவர்கள்
திடமும் அறிவும் பெறுவார்கள். (2)
தயிரைக் கடைந்தால் மோராகும்,
மோருக் கிணையில்லை மூவுலகில்;
பசியைத் தணிக்கும் உணவதுவே,
தாகத்தைத் தீர்க்கும் தனி அமுதம். (3)
தயிரின் ஆடையைத் தனியாகக்
கடைந்தால் வெண்ணெய் கிடைத்திடுமே;
வெண்ணெயைக் காய்ச்ச நெய்யாகும்—உண்போர்
கண்ணிலும் அறிவிலும் ஒளி பாயும். (4)
தனி ஒரு குழந்தையைத் தாய் காப்பாள்,
உயிர் தருவாள், அன்பின் உரு ஆவாள்;
உலகுக்கெல்லாம் பசு தாய் ஆகும்,
உவப்புடன் அதற்கு நாம் உணவளிப்போம்.
அன்புடன் அதனைப் போற்றிடுவோம். (5)

# பயிற்சி

1. எதிர்ப் பதங்களை எழுது:—

| | |
|---|---|
| பகல் | அண்ணன்மார்கள் |
| சூடான | தைரியசாலி |
| வெள்ளை வெளேர் | புத்திசாலி |
| மிருதுவாக | வெற்றி |
| கொடுத்தல் | சோம்பல் |

2. மௌனமாகப் படித்து, முழு வாக்கியங்களைச் சொல்லு; பிறகு, எழுது:—

பசு நமக்கு பாலைப்........தரும்.

பாலைக் குடித்தால் .......வளரும்.

தயிரும் சோறும் உண்பவர்கள்........பெறுவார்கள்.

மோரு பசியைத்........தாகத்தைத்........

வெண்ணெயைக்........நெய்யாகும்.

உலகுக்கெல்லாம் பசு........

பசுவை அன்புடன்........வோம்.

........பால் மாத்திரம்தான் குடிக்கும்.



# பாடம் 25

# குடை ராட்டினம்



(1)

குடை ராட்டினத்தில் சுற்றப் போகிறேன்
குதிரை மீதேறி,
குதிரை என்னைக் கொண்டு சேர்க்கும்
கும்பகோணத்திலே!

(2)

குடை ராட்டினத்தில் சுற்றப் போகிறேன்
யானை மீதேறி,
யானை என்னைக் கொண்டு சேர்க்கும்
யாழ்ப்பாணத்திலே!

(3)

குடை ராட்டினத்தில் சுற்றப் போகிறேன்
மாட்டின் மீதேறி,

மாடு என்னைக் கொண்டு சேர்க்கும்
மதுரை நகரிலே!

(4)

குடை ராட்டினத்தில் சுற்றப் போகிறேன்
ஆட்டின் மீதேறி,
ஆடு என்னைக் கொண்டு சேர்க்கும்
அலஹாபாதிலே!

(5)

குடை ராட்டினத்தில் சுற்றப் போகிறேன்
ஒட்டை மீதேறி,
ஒட்டை என்னைக் கொண்டு சேர்க்கும்
ஒத்தக்கமண்டிலே!

(6)

குடை ராட்டினத்தில் சுற்றப் போகிறேன்
சிங்கம் மீதேறி,
சிங்கம் என்னைக் கொண்டு சேர்க்கும்
சிங்கப்பூரிலே!

## பயிற்சி

இந்தப் பாட்டில் வந்துள்ள மிருகங்களின் பெயர்களை எழுத்து வரிசைக் கிரமத்தில் எழுது.

இந்தப் பாட்டில் வந்துள்ள ஊர்களின் பெயர்களை எழுத்து வரிசைக் கிரமத்தில் எழுது.

# பரீக்ஷை தேறிவிட்டேன்!

இந்த வானவில் வாசகம் இரண்டாம் புத்தகம்
முழுவதும் நான் படித்துவிட்டேன்.
திருப்பித் திருப்பிப் பல தடவை படித்துவிட்டேன்.
அத்தனைப் பாடமும் எனக்கு மனப்பாடம்!
என் ஆசிரியர் ஸ்ரீ..................................................
எனக்கு மிகுந்த அன்புடன் பாடம் சொல்லித்
தந்தார்.
பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் ஸ்ரீ..............................
........ என்னைக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம்
நான் நன்ருகப் பதில் சொன்னேன்.
நாடகங்கள் எல்லாம் நாங்கள் நடித்துக்காட்டிரேம்.
நாடகத்தில் நான்................ஆக நடித்தேன்.
என் தலைமை ஆசிரியர் ஸ்ரீ..................................
பரீக்ஷை நடத்திஞர்.
அந்தப் பரீக்ஷையில் நான் தேறிவிட்டேன்.
விடுமுறை வந்துவிட்டது.
விடுமுறைக்கப்புறம் பள்ளிக்கூடம் திறக்கும்.
அப்போது நான் படிக்கப்போவது மூன்ரும்
வகுப்பு!

# வானவில் வாசகம்

## மூன்றும் புத்தகம்

(மூன்றும் வகுப்பிற்கு)

ஏ. ராம அய்யர், எம்.ஏ.,
கே. குருஸ்வாமி, பி.ஏ., எல்.டி.,
எழுதியது.

பதிப்புரிமை பெற்றது

முதல் பதிப்பு 1952
இரண்டாம் திருத்திய பதிப்பு 1953

மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட்
மதராஸ் பம்பாய் கல்கத்தா லண்டன்
1953

# முகவுரை

இவ் வானவில் வாசகத் தொகுதியானது, சென்னை அரசாங்கத்தாரின் ஆரம்பப் பள்ளிக்கூடப் போதனைத் திட்டத்தையும் (1939), அந்தத் திட்டத்திற்கு விளக்கமாக அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள உபாத்தியாயர் குறிப்புக்களையும் (1940) ஒட்டி எழுதப்பெற்றுள்ளது. பா[illegible] பயிற்சியின் அடிப்படையான தத்துவங்களைப் பின்பற்றிப் பாடங்களை அமைத்துள்ளோம். இப்புத்தகத்தைச் சிறுவர்களுக்குக் கற்பிக்கும் முறையை விளக்கிப் புத்தகத்தின் கடைசியில் தந்துள்ள குறிப்புக்களை உபாத்தியாயர்கள் நன்கு கவனிக்கவும்.

ஆசிரியர்கள்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | 2 |
| 1. | ஆறு | 5 |
| 2. | நான் எழுதிய கடிதம் | 7 |
| 3. | சிங்காரம் வருகிறான் | 9 |
| 4. | வீட்டுத் தோட்டம் | 11 |
| 5. | காய்கறிகள் | 13 |
| 6. | பிறந்த நாள் | 14 |
| 7. | உணவுப் பொருள்கள் | 16 |
| 8. | மளிகை | 19 |
| 9. | பொக்கிஷம் | 20 |
| 10. | காட்டுப் புறா | 22 |
| 11. | உண்மைதானா? | 25 |
| 12. | பிரபுவும் ஏழையும் | 27 |
| 13. | சிட்டுக் குருவி | 29 |
| 14. | மருந்துச் சீட்டு | 31 |
| 15. | வைத்தியர் வருகிறார் | 33 |
| 16. | கழுதை | 34 |
| 17. | கரடி | 37 |
| 18. | வார்த்தைகள் விளையாட்டு | 39 |
| 19. | கிருஷ்ணன் வீடு | 42 |
| 20. | நமது கூட்டாளி | 44 |
| 21. | ஓநாய் | 46 |

| | | பக்கம் |
|---|---|---|
| 22. | பாப்பா பாட்டு | 49 |
| 23. | தோப்பு | 52 |
| 24. | பழங்கள் | 55 |
| 25. | தொழில்கள் (சம்பாஷணை) I | 56 |
| 26. | ,, ( ,, ) II | 61 |
| 27. | நாடகம் | 65 |
| 28. | கெட்ட நண்பன் (நாடகம்) | 67 |
| 29. | வண்டு | 74 |
| 30. | பரிசளிப்பு | 77 |
| 31. | கும்மி | 80 |
| 32. | பிரயாணம் | 82 |
| 33. | வானவில் | 85 |
| | உபாத்தியாயருக்கான குறிப்புக்கள் | 87 |

## ஆசிரியர் நன்றி

தமிழ்க் கவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களிலிருந்து சில பகுதிகளை இப் புத்தகத்தில் சேர்ப்பதற்கு அனுமதி யளித்த சென்னை அரசாங்கத்தாருக்கு ஆசிரியர்கள் நன்றி செலுத்துகிறார்கள்.

# பாடம் 1 ஒன்று



## ஆறு

ஆறே ஆறே, என்போல் உனக்கு
ஓடி ஆடி விளை யாடத் தெரியுமோ?

மலையின் சரிவில் மகிழ்ந்து தவழ்ந்தேன்,
மரங்கள் இடையில் மறைந்து ஒளிந்தேன்.
பாறை இடுக்கில் பாய்ந்து பதுங்கினேன்,
அருவி நீராய் இரைந்து குதித்தேன்,
நாட்டை அடைய நர்த்தனம் செய்தேன்,
கடலை அடைந்ததும் களைத்துப் படுத்தேன்!

ஆறே ஆறே, அழகிய ஆறே,
உற்ற நண்பர்கள் உண்டோ உனக்கு?

மேகம் அணைத்திடும் மலையும் குன்றும்,
ஓங்கி வளர்ந்த உயர் மரங்களும்,
ஊசலாடும் கொடியும் செடியும்,
புன்னகை பூத்த புல்லும் பூவும்,
குடிக்க வந்த புலியும் மானும்,
குளிக்க வந்த யானையும் முதலையும்,
ரகசியம் பேசிய தென்றல் காற்றும்,
வாழ்த்திய வானமும் அவ் வானவில் தானும்
நெருக்கி அணைத்த நிலாவும் வெயிலும்,
நெடுங்காலமாக என் நெருங்கிய நண்பர்கள்

ஆறே ஆறே, அழகிய ஆறே,
உன்னால் பிரயோசனம் உண்டு எனக்கு.

ஏரியும் குளமும் நிறைவது உன்னால்,
மீனும் மனிதனும் வாழ்வது உன்னால்,
தாகமும் அழுக்கும் தீர்வது உன்னால்,
தாபமும் களைப்பும் தணிவது உன்னால்,
நெல்லும் கரும்பும் விளைவது உன்னால்,
தூய்மையும் சுகமும் தங்குவது உன்னால்,
ஆண்டவன் அருள்போல் எங்கும் பரந்து
நன்மையே செய்து நாடுவாய் கடலை!
ஆறே வாழ்க, வாழ்க நீ, ஆறே!

## பயிற்சி

குறிப்பு:—ஒவ்வோர் அப்பியாசத்தையும் கூடியவரை மௌனமாக வாசித்துத்தான் செய்யவேண்டும்.

I. காலி இடங்களை நிரப்பி எழுது:—

1. மலையின் சரிவில் —— தவழ்ந்தேன்.
2. மரங்கள் இடையில் மறைந்து ——.
3. பாறை —— பாய்ந்து பதுங்கினேன்.
4. அருவி நீராய் —— குதித்தேன்.
5. நாட்டை அடைய —— செய்தேன்.
6. கடலை அடைந்ததும் களைத்துப் ——.

II. ஆறு, ஏரி, குளம்,—இவை பெயர்ச் சொற்கள். கீழ்க் கண்ட சொற்களில் எவை பெயர்ச் சொற்கள்? அவைகளை எழுத்து வரிசை தவறாமல் எழுது:—

மலை, பாய்ந்து, பாறை, மரங்கள், நண்பர்கள், உனக்கு, வானவில், அழகிய, மீன், மனிதன், நாடுவாய், யானை, புலி, முதலை, புன்னகை, எங்கும், தூய்மை.

# பாடம் 2 இரண்டு

# நான் எழுதிய கடிதம்

9, முதல் தெருவு,
ரங்க நல்லூர், சேலம் ஜில்லா,
விஜய ஹு வைகாசி 15.

க்ஷேமம்.

அன்புள்ள அத்தான் சிங்காரத்துக்கு முத்துக் குமரன் எழுதுவது.

என் அத்தை எழுதிய கடிதம் நேற்று வந்தது. நானும் அதைப் படித்தேன். உன்னை இங்கே

அனுப்பப் போகிறார்களாம். எங்களுக்கெல்லாம் மிகவும் சந்தோஷம். உனக்கு நானும் கடிதம் எழுதவேண்டும் என்று எனக்கு ஆசை. இதுதான் நான் எழுதும் முதல் கடிதம்!

இங்கே பள்ளிக்கூடம் திறந்தாயிற்று. சீக்கிரம் வா!

உன் அன்பன்,
முத்து.

மேல் விலாசம் :—

ஸ்ரீ மா. சிங்காரம்,
ஸ்ரீ சி. மாணிக்கம் அவர்கள் வீடு,
173, வைத்தியர் நல்லமுத்துத் தெரு,
சௌகார்பேட்டை,
சென்னை.

## பயிற்சி

I. *விடை எழுது :—*

1. *இக்கடிதம் எழுதியது யார்? யாருக்கு?*
2. *"எங்களுக்கெல்லாம் மிகவும் சந்தோஷம்." ஏன்?*
3. *"சீக்கிரம் வா!" ஏன்?*
4. *நீ யாருக்காவது கடிதம் எழுதியதுண்டா?*
5. *உன் மேல் விலாசம் என்ன?*

II. *இக்கடிதத்தில் வந்துள்ள பெயர்ச் சொற்களை எழுத்து வரிசைக் கிரமத்தில் எழுது.*

## பாடம் 3 மூன்று



## சிங்காரம் வருகிறான்

"வா, தம்பி, சிங்காரம்!" என்றாள் என் அம்மா. இப்படித் துரும்பாக இளைத்துப் போய்விட்டாயே! ஏன்?"

"நம் ஊருக்கு வந்துவிட்டான் அல்லவா? ஒரே வருஷத்தில் எப்படி மாறி விடுகிறான், பார்!" என்றார் அப்பா.

அம்மாவிடம் போய், கைகூப்பி வணக்கம் தெரிவித்தான் சிங்காரம். அம்மா சிரித்தாள். அன்புடன் அவனை அணைத்துக்கொண்டாள். "பட்டணத்து நாகரிகம், பார்த்தாயா, முத்து?" என்று என்னைக் கேட்டாள்.

"சாப்பாடு ஆனதும், வந்த அலுப்புத் தீர இன்று படுத்துத் தூங்கு. நாளைமுதல் முத்துவுடன்

பள்ளிக்கூடம் போகலாம்," என்று சிங்காரத்திடம் அப்பா சொன்னார்.

சிங்காரம் தன் பெட்டியைத் திறந்தான். ஒரு காகிதத்தை எடுத்து அப்பாவிடம் கொடுத்தான். தன் பழைய பள்ளிக்கூடத்திலிருந்து அவன் கொண்டு வந்திருந்த 'பதிவுத்தாள்' அது.

"முத்து, இதோ பார்! உன் அத்தான் எந்த வகுப்பில் சேரப்போகிறான், சொல்."

பார்த்தேன்.

மூன்றாம் வகுப்பு!

எனக்குக் கொண்டாட்டம்தான்!

## பயிற்சி

I. காலி இடங்களை நிரப்பி எழுது :—

1. —— இளைத்துப் போய்விட்டாயே!
2. அம்மாவிடம் போய், —— வணக்கம் தெரிவித்தான்.
3. அம்மா —— அவனை அணைத்துக்கொண்டாள்.
4. வந்த ——த் தீர இன்று படுத்துத் தூங்கு.
5. அவன் கொண்டு வந்திருந்த —— அது.
6. எனக்குக் ——தான்!

II. இப்பாடத்தில் வந்துள்ள பெயர்ச் சொற்களை எடுத்து வரிசைக் கிரமத்தில் எழுது.

III. முழு வாக்கியங்களாக எழுது :—

1. அவன் ஊருக்கு வந்துவிட்டான்.
2. நான் ..............................
3. நீ ..............................
4. அவள் ..............................
5. நாங்கள் ..............................

## பாடம் 4 நான்கு



# வீட்டுத் தோட்டம்

"மாமா! காய்கறி வாங்க முத்து போகும்போது நானும் கூடப் போகலாமா?" என்று கேட்டான் சிங்காரம்.

காலை நேரம். அவன் பல் துலக்கியாயிற்று. நான் முன்பே வெளியில் எழுந்து போய்விட்டேன். ஆற்றில் குளித்து, கடவுளைத் தொழுது, நான் வீடு திரும்புவதும் சூரியன் உதிப்பதும் சரியாக இருந்தது.

சிங்காரம் கேட்டதற்கு மாமா சிரித்தார்.

"என்னுடன் வா," என்றார்.

கொல்லைப்புறத் தோட்டத்திற்கு அவனை அழைத்துப்போனார்.

"இங்கே என்னென்ன இருக்கிறது, சொல்,' என்றார்.

சிங்காரத்துக்கு ஒரே ஆச்சரியம்! உற்சாகத்துடன் தோட்டத்தின் கோடிவரை அவன் ஓடினன்

"இதோ, கிணற்றின் பக்கத்தில் வாழை மரம் அதுதான் கீரைப்பாத்தி! இதோ கத்திரிச்செடி மாமா!" என்று சந்தோஷத்துடன் அவன் உரக்கக் கூவினன்.

வெண்டைச்செடியையும் புடலங்கொடியையும் அவனல் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை என் தெரியுமா? அவை காய்க்க ஆரம்பிக்கவில்லை

"இது மிளகாய்ச் செடி, மாமா. இது கறிவேப்பிலை மரம். இது முருங்கை மரம்."

பையையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு இந்த ஊரில் கடைக்குப் போகவேண்டுமா?

"சாயந்திரம் அத்தானைத் தோப்புக்கு அழைத்துப் போகிறேன், அப்பா," என்றேன்.

"நல்லது. அப்படியே செய்," என்றார் அவர்

## பயிற்சி

I. விடை எழுது :—

1. சூரியன் உதிப்பதற்குள் முத்து செய்ததென்ன?
2. "சிங்காரம் கேட்டதற்கு மாமா சிரித்தார்." ஏன்?

3. "வெண்டைச் செடியையும் புடலங் கொடியையும் அவனால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை." ஏன்?

4. வீட்டுத் தோட்டத்தில் என்னென்ன மரங்களும் செடிகளும் கொடிகளும் இருந்தன?

5. முத்து அத்தானை எங்கு அழைத்துப் போவதாகச் சொன்னான்?

6. சிங்காரத்தின் மாமா யார்?

II. முழு வாக்கியங்களாக எழுது :—

1. அவன் உரக்கக் கூவினான்.
2. அது ..............................
3. நீங்கள் ..............................
4. அவர்கள் ..............................
5. எவன் ..............................?
6. எவர் ..............................?

# பாடம் 5 ஐந்து

## காய்கறிகள்

வாழைக்காய் வெண்டைக்காய்

கொத்தவரை சுரை பாகல்

அவரைக்காய் சுண்டைக்காய்

பூசணி பறங்கி பீர்க்கை

அத்திக்காய் புடலங்காய்

கக்கரி வெள்ளரி கத்தரி
களாக்காய் முருங்கை இஞ்சி
பச்சை மிளகாய் தேங்காய்
கிடாரன் நாரத்தை எலுமிச்சை
மாங்காய் நெல்லி மாகாளி
கருணை சேனை சேம்பு
உருளைக்கிழங்கு வள்ளிக்கிழங்கு
வெங்காயம் உள்ளி முள்ளங்கி
வெந்தயக்கீரை அரைக்கீரை
கொத்துமல்லி கறிவேப்பிலை
சொக்காக்கீரை சோகிக்கீரை
சக்கிரவர்த்திக்கீரை சிறுகீரை
பருப்புக்கீரை பசளைக்கீரை
புளிச்சைக்கீரை புதினா
அகத்திக்கீரை கீரைத்தண்டு
முளைக்கீரை முட்டைக்கோஸ்!

## பாடம் 6 ஆறு

## பிறந்த நாள்

வீட்டில் இன்று விருந்துச் சமையல். ஐயோ பலம்!

“அத்தான் வந்ததற்காக இன்றைக்கு விருந்தா, அம்மா ?” என்று கேட்டேன்.

“அதுவும்தான் !” என்று சொல்லி அம்மா சிரித்தாள். அப்போது அப்பா சின்னப்பயலை உள்ளே அழைத்து வந்தார். அவனுக்குப் புதுச் சொக்காய் போட்டிருந்தது.

அவன் பெயர் ரத்தினம், அதாவது, ரத்தின சபாபதி. ஆனல் நாங்கள் கூப்பிடுவது, ‘சின்னப் பயல்.’ அவனுக்கு இன்று ஒரு வயது நிரம்புகிறது.

தித்திப்பான பாயசம் முதலில் சின்னப் பயலுக்குத் தருகிருர் அப்பா; பருப்பும் நெய்யும் கலந்த் சோறு பிறகு தருகிருர்.

சின்னப்பயலுக்குக் கடைவாய்ப்பல் இன்னும் முளைக்கவில்லை. இருந்தாலும், சோறு, பழம், எதை யும் அவன் நன்ருகக் கடித்துத் தின்கிருன் !

நானும் எதைத் தின்ருலும் நன்ருகக் கடித்து மென்று தின்கிறேன். உமிழ் நீருடன் கலந்து அது கூழ்போல ஆகிறது. அப்போது அது எவ்வளவு ருசி ! அதுதான் உடம்பிற்கும் நல்லதாம்: அப்பா சொல்கிருர்.

காரமும் புளிப்பும் அதற்குள் சின்னக் குழந் தைக்குச் சேர்க்கிறதில்லை. நான் பெரியவன் ; கறி, குழம்பு, ரசம், எல்லாம் சாப்பிடுகிறேன்.

வெள்ளாட்டுப் பாலை வடிகட்டிக் காய்ச்சி எனக்கு இரவிலே அம்மா தருகிருள்.

கோதுமை நல்லது என்று ரொட்டி சுட்டு நேற்று எனக்குத் தந்தாள். நன்றாய்த்தான் இருந்தது. ஆனால் அதைக் கடித்து விழுங்க, அப்பா! எத்தனை நேரம்!

### பயிற்சி

I. **காலி இடங்களை நிரப்பி எழுது :—**

1. வீட்டில் அன்று ——ச் சமையல்.
2. அவனுக்கு இன்று ஒரு வயது ——.
3. சின்னப்பயலுக்கு இன்னும் —— முளைக்கவில்லை.
4. எதைத் தின்றாலும் நன்றாகக் கடித்து —— தின்கிறேன்.
5. அம்மா ரொட்டி —— நேற்று எனக்குத் தந்தாள்.

II. **பெயர்ச் சொற்களைப் பொறுக்கி, எழுத்து வரிசை தவறாமல் எழுது :—**

இன்று, ரத்தினம், சோறு, கூழ், உடம்பிற்கு, எவ்வள எல்லாம், கோதுமை, ருசி, மென்று, புளிப்பு, காரம்.

# பாடம் 7 ஏழு

# உணவுப் பொருள்கள்

நான் உண்ணும்போது யோசித்துப் பார்க்கிறேன்—எத்தனைப் பண்டங்கள் சேர்ந்து என் உணவு உருவாகிறது!

உணவுப் பொருள்களில் முக்கியமானவை அரிசியும் கோதுமையும். ஊரைச் சுற்றி உள்ள வயலில் நெல் விளைவதைப் பார்க்கிறேன். நம் தமிழ் நாட்டின் பல பாகங்களில் நெல் விளைகிறது.

கோதுமை அப்படி அல்ல. அது வெப்பம் குறைவாக உள்ள இடத்தில்தான் விளையுமாம். நம் நாட்டின் வடக்கில், கோதுமை விளைகிறது; அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற அயல் நாடுகளிலும் விளைகிறது. அங்கிருந்து நாம் கோதுமையைத் தருவிக்கிறோம்.

அடுத்த வீட்டில் செங்கோடன் இருக்கிறான். அவன் இந்த ஊருக்குப் புதிது. அவனுக்குக் கம்பும் கேழ்வரகும் தின்று பழக்கம். எனக்கு ஒரு நாள் கேழ்வரகுக்களி செய்து அம்மா தந்தாள். கம்பங்கூழும் தின்று பார்த்தேன். இரண்டும் 'பலே ஜோர்'!

நீர்வளம் குறைந்த இடம் 'வானம் பார்த்த சீமை.' உதாரணம்: சேலம் ஜில்லா, ராமநாதபுரம் ஜில்லா. அங்கே சோளம், கேழ்வரகு, கம்பு, நிலக்கடலை, விளையும்.

நெல் விளையும் செழிப்பான இடத்தில் கரும்பு விளையும்; தென்னையும் வளரும். கருப்பஞ் சாற்றைக் காய்ச்சினால் வெல்லம், சர்க்கரை, கற்கண்டு, கிடைக்கும்.

தூத்துக்குடியிலிருந்து ஒரு கூடை பனங் கற்கண்டு மாமா அனுப்பினார்.....இன்னும் எவ்வளவோ சொல்ல நினைத்தேன்: துவரை, பயறு, உளுந்து, மொச்சை. அது போகட்டும். உப்பு, புளி, மிளகாய்—இந்த மூன்றும் சேராத சமையல் உண்டா?

## பயிற்சி

I. **விடை எழுது :—**

1. உணவுப் பொருள்களில் முக்கியமானவை எவை ?
2. கோதுமை எங்கு விளையும் ?
3. செங்கோடன் என்ன தின்பது வழக்கம் ?
4. 'வானம் பார்த்த சீமை' என்றால் என்ன ?
5. கருப்பஞ் சாற்றைக் காய்ச்சினால் என்ன கிடைக்கும் ?
6. 'இந்த மூன்றும் சேராத சமையல் உண்டா ?' எந்த மூன்றும் ?

II. **வாக்கியங்கள் அமைத்து எழுது :—**

| | | |
|---|---|---|
| 1. | பல பண்டங்கள் சேர்ந்து | சொல்ல நினைத்தேன். |
| 2. | வயலில் | தென்னையும் வளரும். |
| 3. | கம்பங்கூழும் | மாமா அனுப்பினார். |
| 4. | நெல் விளையுமிடத்தில் | நம் உணவு உருவாகிறது. |
| 5. | பனங் கற்கண்டு | நெல் விளைகிறது. |
| 6. | இன்னும் எவ்வளவோ | தின்று பார்த்தேன். |

III. **கீழ்க்கண்ட சொற்களை ஒருமை, பன்மை, என்று இரு வரிசைகளாகப் பிரித்து எழுது :—**

வயல், பொருள்கள், அவை, மாமா, வாக்கியங்கள், கற்கண்டு, பெரியவன், நாம், பற்கள், உணவு.

# பாடம் 8 எட்டு



## மளிகை

| | | |
|---|---|---|
| பச்சை | புழுங்கல் | அரிசி |
| பயறு | உளுந்து | துவரை |
| கோதுமை | மைதா | ரவை |
| கம்பு | வரகு | சோளம் |
| கடலை | மொச்சை | பட்டாணி |
| உப்பு | புளி | மிளகாய் |
| மிளகு | சீரகம் | சோம்பு |
| மல்லி | மஞ்சள் | காயம் |
| எள் | கொள் | கடுகு |
| வெந்தயம் | சேமியா | சவ்வரிசி |

| | | |
|---|---|---|
| சுண்டை | வத்தல் | சுக்கு |
| கண்டத் | திப்பிலி | ஓமம் |
| கிராம்பு | பட்டை | சாதிக்காய் |
| சாதிப் | பத்திரி | ஏலக்காய் |
| பாக்கு | பிண்ணாக்கு | சிகைக்காய் |
| சாம்பிராணி | சூடம் | ஊதுவத்தி |
| சந்தனம் | குங்குமம் | தேன் பன்னீர் |
| முந்திரிப் | பருப்பு | பேரீச்சை |
| திராக்ஷை | வாதுமை | வெல்லம் |
| சீனி | சர்க்கரை | கற்கண்டு ! |

## பாடம் 9 ஒன்பது

## பொக்கிஷம்

செங்கோடனின் அப்பா ஒரு நாள் எங்களுக்குத் தம் கதையைச் சொன்னார்:—

"என் தகப்பனார் நல்ல உழைப்பாளி; சோம்பலே அவருக்கு வராது. வயலிலோ தோட்டத்திலோ, வீட்டிலோ, அவர் ஏதாவது வேலை செய்து கொண்டே இருப்பார்.

என் அண்ணன்மார் மூன்றுபேர். அவர்களும் பாடுபட்டு எங்கள் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவர நினைத்தார்கள். ஆனால் சோம்பல்

அவர்களைப் பிடித்துக்கொள்வது உண்டு. வேலை என்றால் ஒவ்வொரு சமயம் அவர்கள் முணுமுணுப்பார்கள்.

அவர்களைத் திருத்தவேண்டும், தம்மைப்போல் உழைப்பாளிகளாக ஆக்கவேண்டும், என்று என் தகப்பனருக்கு எவ்வளவோ ஆசை. நான் அப்போது மிகவும் சின்னப் பிள்ளை. அவரோ கிழவர்.

ஒரு நாள் அவர் எங்கள் நாலு பேரையும் கூப்பிட்டனுப்பினார். அவர் அப்போது படுத்த படுக்கையாக இருந்தார். 'பிள்ளைகளே! நான் இனிமேல் பிழைத்து எழுந்திருக்க மாட்டேன். நம்முடைய வயலில் நிறையப் பொக்கிஷம் புதைந்து கிடக்கிறது. நன்றாக வெட்டிப் பாருங்கள், கிடைக்கும்,' என்று சொல்லி அவர் வாய் மூடினார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் செத்துப் போனார்.

என் அண்ணன்மார் வயலை நன்றாக வெட்டினார்கள்; ஒரு இடம் விடாமல் ஆழமாக வெட்டிப் பார்த்தார்கள்.

அவர்கள் நினைத்தபடி தங்கம் எங்கும் கிடைக்கவில்லை.

ஆனால் அந்த வருஷம் பயிர் நன்றாகச் செழித்து விளைந்தது; எப்போதையும்விட மூன்று மடங்கு விளைந்தது. என் அண்ணன்மாருக்கு நிறைய லாபம். ஒரு பெரும் உண்மையை அவர்கள் கண்டு கொண்டார்கள்.

என்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி நன்ருகப் படிக்க வைத்தது அவர்கள்தான். என் தகப்பனூர் சொன்ன பொக்கிஷம் என்ன, தெரிந்ததா?"

ஆஹா! உழைப்புத்தான் பொக்கிஷம். கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்த பணம்தான் சிறந்த பொக்கிஷம்.

### பயிற்சி

I. 'ஒரு பெரும் உண்மையை அவர்கள் கண்டுகொண்டார்கள்.' என்ன உண்மையை என்று விளக்கி எழுது.

II. எதிர்ப் பதங்களை எழுது :—

| | | |
|---|---|---|
| உழைப்பாளி | மூடினூர் | சோம்பேறி |
| அண்ணன் | லாபம் | |
| கிழவன் | கொண்டுவர | |
| எழுந்திரு | | |

III. 'போகிறேன், வா, சொன்னூர்' — இவை வினைச்சொற்கள். இந்தப் பாடத்தில் வந்துள்ள வினைச்சொற்களைப் பொறுக்கி எழுது.

# பாடம் 10 பத்து

# காட்டுப் புரு

நான் வசித்துவந்தது ஒரு பெரிய தோப்பு. என்னைப்போல அங்கே இருந்த புரு மொத்தம் மூந்நூறுக்குமேல் இருக்கும். தோப்புக்குப் பக்கத்தில் ஒரு வயல்.

குடியானவன் இந்தத்தடவை வயலில் நெல் விதைக்கவில்லை; சணல் விதைத்தான். அவன் எண்ணம் என்ன என்று எனக்குத் தெரிந்தது. என் தோழர்களையெல்லாம் கூப்பிட்டேன்.

"இதோ, பாருங்கள்! குடியானவன் தெளிப்பது சணல் விதை. சணல் விதை செடியாகும். சணல் செடி கயிருகும். கயிற்றைப் பின்னிஞல் வலையாகும். வலையை வைத்து நம்மைப் பிடித்துவிடுவான். ஆகையால் இப்போதே சணல் விதையைப் பொறுக்கித் தின்றுவிடுங்கள்," என்றேன்.

"ஆஹா! ஆனல் அதற்கென்ன அவசரம்?" என்று சொல்லின அந்தச் சோம்பேறிப் புருக்கள்.

சணல் விதை முளைத்து வெளியே வந்தது.

"இப்போதாவது செடிகளை முளையிலேயே கொத்தி அழித்துவிடுங்கள்," என்றேன் மறுபடியும்.

"ஆஹா! அப்படியோ! ஆனல் அதற்கு இப்பொழுது என்ன அவசரம்?" என்றன புருக்கள்.

நான் ஒருவன் இருந்து வேறே என்ன செய்ய முடியும்? பக்கத்தில் இருந்தது ஒரு பட்டணம். நான் அங்கே குடிபோனேன். சுகமாக வாழ்ந்து வந்தேன்.

கொஞ்ச நாள் ஆயிற்று.

என் உறவினர் அழுகுரல் ஒரு நாள் கேட்டது. உச்சிக் கிளையிலிருந்து கீழே பறந்து வந்தேன்.

அட பாவமே! தோப்பில் இருந்த அத்தனைப் புருக்களையும் வலைவைத்துப் பிடித்த அந்தக் குடியானவன் அவைகளைக் கட்டிப்போட்டு இதே பட்டணத்தில் விலைக்கு விற்றுக்கொண்டிருந்தான்!

எனக்குப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது. நான் சொன்னபடி அவை முன்பே செய்திருந்தாலோ?

## பயிற்சி

I. **பொருத்தமான வாக்கியங்களை அமைத்து எழுது :—**

| | |
|---|---|
| 1. நான் வசிப்பது | அவசரம்? |
| 2. குடியானவன் | பரிதாபமாக இருந்தது. |
| 3. அதற்கென்ன | வாழ்ந்து வந்தேன். |
| 4. செடிகளை | ஒரு பெரிய தோப்பு. |
| 5. நான் பட்டணத்தில் | சணல் விதைத்தான். |
| 6. மிகவும் | அழித்து விடுங்கள். |

II. மேலே வந்துள்ள வாக்கியங்களிலிருந்து வினைச் சொற்களைப் பொறுக்கி, அவைகளை எழுத்து வரிசை தவறாமல் எழுது.

III. **விடை எழுது :—**

1. தோப்பில் வசித்துவந்த புருக்கள் எத்தனை?
2. புரு தன் தோழர்களுக்கு என்ன சொல்லிற்று?
3. "என் உறவினர் அழுகுரல் ஒரு நாள் கேட்டது." ஏன்?
4. அந்தப் புருக்களுக்கு ஏன் அந்தக் கதி நேர்ந்தது?

# பாடம் 11 பதினொன்று

## உண்மைதானா?

பாலைக்கீழே சிந்தியது
உங்களில் யாவர், சொல்லுங்கள்!
எங்களுக் கொன்றுமே தெரியாது—அந்தப்
பக்கமே நாங்கள் வரவில்லை!

பாத்திரம் அடியில் நசுக்கியது
உங்களில் யாவர் சொல்லுங்கள்.
எங்களுக் கொன்றுமே தெரியாது—அந்தப்
பக்கமே நாங்கள் வரவில்லை!

மேஜையில் மசியைக் கவிழ்த்தது,
புத்தக அட்டையைக் கிழித்தது,
பென்சில் முனையை ஒடித்தது,
குப்பையை இங்கே கொட்டியது,
சட்டைத் துணியைத் தொலைத்தது,
கண்ணாடி விளக்கை உடைத்தது,
காசைப் பையிலிருந் தெடுத்தது,
உங்களில் யாவர் சொல்லுங்கள்!
எங்களுக் கொன்றுமே தெரியாது—அந்தப்
பக்கமே நாங்கள் வரவில்லை!

பால் தானாகவே சிந்தியது,
பாத்திரம் தானாய் நசுங்கியது,

மசியும் தானுய்க் கவிழ்ந்தது,
புத்தகம் தானே கிழிந்தது,
பென்சில் தானே ஒடிந்தது,
குப்பை தானுய் முளைத்தது,
சட்டை தானுய்த் தொலைந்தது,
கண்ணுடி தானே உடைந்தது,
காசும் தானே பறந்தது,
கடையை நோக்கிப் பறந்தது,
இறக்கை முளைத்துப் பறந்தது!

## பயிற்சி

I. இந்தப் பாடத்தில் வந்துள்ள வினைச் சொற்களைப் பொறுக்கி, எழுத்துவரிசை தவருமல் எழுது.

II. முழு வாக்கியங்களாக எழுது:—

1. பாலைக் கீழே நான் ——.
2. அவன் பாத்திரத்தை ——.
3. பாப்பா மேஜையில் மசியை ——.
4. என் தங்கை கண்ணுடி விளக்கை ——.
5. புத்தகத்தை நீ ——.
6. பென்சில் முனை ——.
7. வேலைக்காரி குப்பையை இங்கே ——.

III. கீழ்க்கண்ட சொற்களை ஆண்பால், பெண்பால், என்று இரு வரிசைகளாகப் பிரித்தெழுது :—

சிங்காரம், அத்தை, பசு, தங்கை, அத்தான், கோபாலன், அம்மா, சீதை, அண்ணன்மார், தகப்பனுர், குடியானவ[illegible] ஸரஸ்வதி.

# பாடம் 12 பன்னிரண்டு

## பிரபுவும் ஏழையும்

மாதம் மார்கழி. பனியோ மிகவும் கடுமை. ஒரே குளிர்! இருந்தாலும் ஒரு முக்கியமான காரியம். அதற்காக வெளியில் புறப்பட்டேன். நிஜார், மேல் சட்டை, ஜோடு, எல்லாம் அணிந்துகொண்டேன். தலையைச் சுற்றியும் ஒரு கம்பளி அணிந்தேன். என் மோட்டார் மெதுவாகத்தான் போயிற்று. அப்போது ஓர் ஏழை மனிதன் சாலையோடு நடந்து வந்தான். அவன் இடுப்பில் மாத்திரம் ஒரு சின்ன கந்தல். வேறு சட்டையோ துணியோ எதுவும் அவன் அணியவில்லை.



அவன் வெகு 'குஷி'யாகப் பாடிக்கொண்டே வந்தான். அவனைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஒரே ஆச்சரியம்! மோட்டாரை நிறுத்தினேன்.

"ஏனப்பா நீ ஒன்றுமே போர்த்திக்கொள்ள வில்லே? உனக்குக் குளிரவில்லேயா!" என்று கேட்டேன். பேசும்போதே என் பல் குளிரால் கிட்டிப் போயிற்று.

"எஜமானே! உங்கள் முகத்தை நீங்கள் மூடிக் கொள்ளக் காணுமே. முகத்திற்கு மாத்திரம் குளிராதா!" என்று அவன் பதிலுக்குக் கேட்டான்.

"என் முகத்திற்குக் குளிர் பழக்கமாகிவிட்டது. அது குளிரை எப்படியாவது தாங்கிவிடும்," என்றேன்.

அதற்கு அவன் சொன்ன பதில் என்ன, தெரியுமா?

"உங்கள் முகத்தைப் போலத்தான் என் உடம்பும். அதற்கும் குளிர் பழக்கமாகிவிட்டது. எனக்கு உடம்பு எல்லாம் முகம் என்று வைத்துக்கொள்ளுங்களேன்!"

பழக்கமாகிவிட்டால் எதையும் பொறுத்துக் கொள்ளலாம்; அதுவே இன்பமாகவும் இருக்கும்!

### பயிற்சி

I. **விடை எழுது :—**

1. பிரபு என்னென்ன அணிந்திருந்தார்?
2. ஏழையைப் பார்க்கப் பிரபுவுக்கு ஏன் ஒரே ஆச்சரியம்?
3. பேசும்போது பிரபுவின் பல் என்ன ஆயிற்று?
4. பிரபு முகத்தை மூடிக்கொள்ளாததற்கு என்ன காரணம் சொன்னார்?

5. ஏழை ஏன் உடம்பை மூடிக்கொள்ள வில்லையாம்?
6. இந்தப் பாடத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டாய்?

II. அடியில் கோடிட்ட பதங்களின் எதிர்ச் சொற்களைப் போட்டு வாக்கியங்களை அமைத்து எழுது.

1. பனி மிகவும் கடுமை.
2. மோட்டார் மெதுவாகத் தான் போயிற்று.
3. அவன் வெகு 'குஷி'யாகப் பாடிக்கொண்டே வந்தான்.
4. மோட்டாரை நிறுத்திலேன்.
5. முகத்திற்கு மாத்திரம் குளிராதா?

## பாடம் 13 பதின்மூன்று



## சிட்டுக் குருவி

**பெண்:** அம்மா! அந்தச் சிட்டுக் குருவிக்குக்
கொஞ்சமும் குளிராதா?
சும்மா கொட்டும் பனியில் குளிரில்
சுணங்கி நிற்கிறதே!

என்போல் சட்டை போர்வை இருந்தால்
குளிரைச் சகித்திடுமே.
அன்பாய் அதற்குத் துணிகள் தருவோர்
யாரையும் காணுமே!

குருவி : அம்மா! அந்தச் சின்னப்
பெண்ணுக்குக் கொஞ்சமும் குளிராதா?
சும்மா கொட்டும் பனியில் குளிரில்
சுணங்கி நிற்கின்றுள்!
என்போல் சிறகும் இறகும் இருந்தால்
குளிரைச் சகித்திடுவாள்.
அன்பாய் அவளுக்கிறகும் சிறகும்
ஆண்டவன் அருளாறு?

## பயிற்சி

I. கீழ்க்கண்ட சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது :—

1. சுணங்கி
2. கொட்டும் பனி
3. என்போல்
4. சகித்திடு
5. அன்பாய்
6. ஆண்டவன்

II. இந்தப் பாடத்தைப் படிக்கும்பொழுது உனக்குச் சிரிப்பு வருகிறதா? ஏன்?

# பாடம் 14 பதினான்கு
# மருந்துச் சீட்டு

"நல்ல காற்றோட்டம் உள்ள வீடு; திறந்த வெளியில் விளையாட்டு; சுத்தமான கறந்த பாலும் பழங்களும் சேர்ந்த ஆகாரம்."

இதுதான் சென்னையில் சிங்காரத்துக்கு அவன் குடும்ப வைத்தியர் எழுதித்தந்த மருந்துச் சீட்டு!

இங்கே நாட்டுப்புறத்துக்குச் சிங்காரம் ஏன் வந்திருக்கிறான், தெரிந்ததா? அவனுக்கு உடம்பு வெளுத்து வந்தது, எடை குறைந்தது, அடிக்கடிக் காய்ச்சலும் வந்தது. இதெல்லாம் அவன் சென்னையில் இருந்தபோது.

சிங்காரம் இங்கே வந்த ஒரு மாதத்தில் எவ்வளவோ மாறிவிட்டான். இப்போது அவன் வெயில் புறப்படுமட்டும் தூங்குவதில்லை. விடிவதற்கு இரண்டு நாழிகைக்கு முன்பே எழுந்து என்னுடன் சுறு சுறுப்பாக நடக்கிறான். அதிகாலையில் நடப்பதும் ஓடுவதும் உடம்புக்கு எவ்வளவு நல்லது என்பது அவனுக்கு இப்போது தெரியும்.

வேப்பங்குச்சி அல்லது கருவைக்குச்சியைக் கொண்டு சிங்காரம் செவ்வையாகப் பல் துலக்குகிறான். ஓடும் நீரைக் கண்டு பயந்தவனுக்கு இப்போது தண்ணீரில் நீந்தக்கூடத் தைரியம் வந்துவிட்டது.

"நெய் இல்லா உண்டி பாழ், ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்"—என்று இப்போது அவன் உற்சாகமாகப் பாடுகிறான்.

புதிதாகக் கடைந்த வெண்ணெய், நெல்லிக்காய் அளவு, காலையில் அவனுக்கு அம்மா தருகிறாள். பிறகு பழைய சோறு தின்று, பாடம் படித்துப் பள்ளிக்கூடம் போகிறோம். மாலையில் கறந்த சூட்டோடு கொஞ்சம் பசுவின் பால் அவனுக்கு அம்மா தருகிறாள். பிறகு விளையாடப்போகிறோம். விடுமுறை நாட்களில் தோப்பு துரவு எல்லாம் சுற்றுகிறோம். திருவிழா பார்க்கப் பக்கத்து ஊர்களுக்கும் போய் வருகிறோம்.

இப்போது சிங்காரத்துக்குக் காய்ச்சல் வருவதில்லை. அவன் உடம்பில் ரத்தம் ஊறுகிறது, சதை பிடிக்கிறது. அவன் கண்களில் ஒளி வீசுவதைப் பார்க்க எங்களுக்கெல்லாம் சந்தோஷம்!

வைத்தியர் அவனுக்கு எழுதித்தந்த மருந்து முறை சரிதான் அல்லவா?

## பயிற்சி

I. ***விடை எழுது :—***

1. *சிங்காரத்துக்கு அவன் குடும்ப வைத்தியர் எழுதித் தந்த மருந்துச் சீட்டு என்ன?*
2. *சிங்காரம் நாட்டுப் புறத்துக்கு ஏன் வந்தான்?*
3. *சிங்காரம் அதிகாலையில் என்ன செய்கிறான்?*
4. *அவன் உற்சாகமாக என்ன பாடுகிறான்?*
5. *சிங்காரத்தின் உடம்பு இப்போது எப்படி இருக்கிறது?*

II. *சரியான வாக்கியங்களாக எழுது :—*

1. விட்டான் எவ்வளவோ மாதத்தில் சிங்காரம் ஒரு வந்த இங்கே மாறி.
2. வந்து தைரியம்கூட கண்டு ஓடும் பயந்தவனுக்கு நீந்த தண்ணீரில் நீரை விட்டது.
3. சந்தோஷம் ஒளி பார்க்க எல்லாம் வீசுவதை அவன் எங்களுக்கு கண்களில்!
4. நான் அவனுக்கு மருந்து சரி முறை வைத்தியர் எழுதி அல்லவா தந்த?

# பாடம் 15 பதினைந்து



## வைத்தியர் வருகிறார்!

"பொம்மைப் பாப்பாவுக்குக் காய்ச்சல் வந்தது.
என்னடி செய்வேன் நான், தங்கம்மா?"
"சும்மா இராதே நீ, வைத்தியரைக் கூப்பிட்டுக்
கை பார்க்கச் சொல்லடி, கண்ணம்மா!"

“ வைத்தியரே, வைத்தியரே, கண் திறக்கவில்லை,
பால் குடிக்கவுமில்லை பொம்மைப்பாப்பா;
நேற்றிரவு குளிர் தாங்காமல் நடுங்கிற்று,
காய்ச்சலும் வந்தது, கை பாருங்கள் !”

“ நூற்றெரு டிக்ரி காய்ச்சல் இருப்பதால்
நோகும் உடம்பெல்லாம் பாப்பாவுக்கு ;
காற்றடிக்காமலே கம்பளியைப் போர்த்திக்
கட்டிலில் படுக்கவை நாள் முழுதும்.

வேளைக்கு இன்னின்ன மருந்தென்று சொல்கிறேன்,
வேகமாய்ப் போய் அதை வாங்கிக் கொடு ;
நாளைக்கும் வருகிறேன், இன்றைக் கென் ‘பில்’ பணம்
பத்து ரூபாய் கீழே வைத்திடுவாய் !”

## பாடம் 16 பதினறு

## கழுதை

நல்ல சினேகிதராகத்தான் நான் பார்த்துப் பிடித்தேன். என் சினேகிதர் அந்தக் காட்டுக்கு ராஜா. இருந்தாலும் அந்த ராஜாவுக்கு வீண் கர்வம் கிடையாது. அவர் என்னேடு சரி சமானமாகப் பழகினர். எங்கே, என்ன வேலையாகப் போனலும் என்னையும் கூடவே அழைத்துப்போவார். ஏதாவது

வேடிக்கையாகப் பேசிக்கொண்டே நாங்கள் காட்டைச் சுற்றி வருவோம்.

ஒரு நாள் இப்படித்தான் நடுக்காட்டில் போய்க்கொண்டிருந்தோம். அப்போது எதிரில் என்னவோ ஒரு இரைச்சல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். அங்கே ஒரு பெரிய ஓநாய்க் கூட்டம்!

வெகு வேகமாக ஓடி வந்தன ஓநாய்கள். கிட்ட வந்துவிட்டன; எங்களையும் பார்த்துவிட்டன.



நான் உடனே இரைந்து கத்தினேன். அப்படியே அந்தக் கூட்டத்தின்மீது தைரியமாகத் தாவிப் பாய்ந்தேன். என் கூச்சலையும் பாய்ச்சலையும் கண்டு பயப்படாதவர்கள் யார்? உயிருக்குப் பயந்து ஓடியே போயின அந்த ஓநாய்கள்! கொஞ்ச தூரம் துரத்திக்கொண்டு போனேன். அப்புறம், 'பிழைத்துப் போகட்டும்' என்று திரும்பி வந்து விட்டேன்.

ராஜா என்னைப் பார்த்துச் சிரித்தார். "ஏனப்பா அவ்வளவு பலமாக இரைந்து கத்தினாய், கூச்சல் போட்டாய்?" என்று அவர் கேட்டார்.

"ஏன் என்று கேட்கிறீர்! என்னையும் என் குரலையும் கண்டு ஓநாய்கள் பயந்து அலறி ஓட்டம் பிடித்ததை நீர் பார்க்கவில்லையா?" என்றேன்.

"ஓஹோ! உன்னைக்கண்டுதான் ஓநாய் பயந்து ஓடிற்று! பலே! பலே!" என்று சிரித்தார் ராஜா.

அன்றைய தினத்திலிருந்து யார் என்னைப் பார்த்தாலும் சிரிக்கிறார்கள்.

ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை!

## பயிற்சி

I. விடை எழுது:—

1. இந்தக் கதை சொல்வது யார்?
2. "நல்ல சிநேகிதராகத்தான் பார்த்துப் பிடித்தேன்." அந்தச் சிநேகிதர் யார்?
3. "எதிரில் ஒரு இரைச்சல் கேட்டது." என்ன இரைச்சல்?
4. "பலே! பலே!" என்று சிரித்தார் ராஜா. ஏன் சிரித்தார்?

II. மேல் வாக்கியங்களில் வந்துள்ள பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் தனித் தனியாக, எழுத்து வரிசை தவறாமல் எழுது.

III. சரியான வாக்கியங்கள் அமைத்து எழுது:—

1. என்ன எங்கே அழைத்து அவர் என்னையும் போனாலும் வேலையாக கூடவே போவார்.

2. கண்டு யார் கூச்சலையும் பயப்படாதவர் என் பாய்ச்சலையும்?
3. அவ்வளவு அப்பா கத்தினுய் ஏன் இரைந்து பலமாக?
4. பேசிக்கொண்டே வருவோம் ஏதாவது சுற்றி நாங்கள் காட்டை வேடிக்கையாக.

# பாடம் 17 பதினேழு

## கரடி

நான் நல்ல பலசாலி. காட்டில் என் இஷ்டப் படித் திரிவேன். சிங்கம்கூட என்னுடன் சிநேகமாக இருந்தது.

சிங்கமும் நானுமாக ஒரு நாள் காலை ஒரு மான் குட்டியைத் துரத்தினேம். அதைப் பிடித்து அடித்துக் கீழே போட்டோம்.

“இதோ. இந்த மான் குட்டியை நான்தான் தின்பேன்!” என்றது சிங்கம்.

“எனக்குத்தான் சொந்தம் இந்த மான்குட்டி. அதைத் தொட்டாயோ தெரியும் சேதி!” என்று நான் சொன்னேன் பதிலுக்கு. எனக்கு என்னவோ அன்றைக்குச் சிங்கத்தின் முகத்தைக் கண்டாலே பிடிக்கவில்லை!

சிங்கத்துக்கும் என்னவோ கோபம். என்மேல் அது சீறி விழுந்தது. விட்டேன் ஒரு அறை அதன் கன்னத்தில்! அவ்வளவுதான்! சிங்கம் என் மேல் விழுந்து பிடுங்கிற்று. நான் அதை வயிற்றில்



பலமாகக் கடித்தேன். உறுமினோம்; கர்ஜித்தோம்; மூச்சுவிடாமல் சண்டை!

காலை நடுப்பகல் ஆயிற்று; நடுப்பகல் மாலை ஆயிற்று.

வெறும் வயிற்றில், பசியோடு சண்டைபோட ஆரம்பித்தவர்கள் நாங்கள். கால் நாலும் சோர்ந்து போனாலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்போமா? ஆனால் எத்தனை நேரம்தான் இப்படிச் சண்டை போடமுடியும்? மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கக் கீழே சோர்ந்து விழுந்தோம். இரைக்க இரைக்கப் படுத்தோம். உடம்பெல்லாம் ரத்தகாயம்.

எங்கள் நிலைமையை ஒரு நரி பார்த்தது. பேசாமல் அது மான் குட்டியை இழுத்துத் தூக்கிக் கொண்டு போயிற்று. எங்கள் கண்ணாலேயே பார்த்தோம்! ஆனால் காலைக்கூட எங்களால் அசைக்க முடியவில்லையே! அதட்டி மிரட்டவாவது தெம்பு உண்டா?

எங்கள் இருவர் முகத்திலும் அசடு வழிந்தது!

## பயிற்சி

I. "எங்கள் இருவர் முகத்திலும் அசடு வழிந்தது." ஏன்? இந்தக் கதையை உன் தம்பிக்குச் சொல்வதுபோல் எழுது.

II. காலி இடங்களை நிரப்பி எழுது:—

1. சிங்கம்கூட என்னுடன் —— இருந்தது.
2. சிங்கம் என்மேல் —— விழுந்தது.
3. கால் நாலும் —— போனாலும் —— கொடுப்போமா?
4. நரி மான் குட்டியை —— தூக்கிக்கொண்டு ——.
5. ஆனால் காலைக்கூட எங்களால் —— முடியவில்லை.

III. சரியான வாக்கியங்களாக அமைத்து எழுது:—

1. துரத்தினோம் நாள் நாலுமாக மான் ஒரு சிங்கமும் ஒரு குட்டியை காலை.
2. சண்டை முடியும் எத்தனை தான் போட இப்படி நேரம் ஆனால்?
3. வாங்க மேல் கீழே கீழ் மூச்சு மூச்சு விழுந்தோம் சோர்ந்து நாங்கள்.

# பாடம் 18 பதினெட்டு

# வார்த்தைகள்—விளையாட்டு

வள்ளியைப் பள்ளிக்கூடத்தில் இன்றைக்குத் தான் சேர்த்தோம். இதற்கு முன்பே அவளுக்குத் தன் கையெழுத்துப் போடத்தெரியும்.

இன்று சாயந்திரம் எங்கள் சிநேகிதர்கள் நாலு பேரை அம்மா கூப்பிட்டிருந்தாள். எங்கள் ஹெட் மாஸ்டரின் பெண் மேரியை என் அக்காள் அஞ்சலை

அழைத்து வந்தாள். அதே வகுப்பில் படிக்கும் ரஸியாவும் வந்தாள். ஹமீதும் அப்துலும் என்னுடன் வந்தவர்கள். சிங்காரமும் செங்கோடனும் எப்போதுமே எங்களுடன் இருப்பவர்கள்.

எங்களுக்குப் பணியாரமும் பழமும் நிறையக் கொடுத்தாள் அம்மா. அஞ்சலையும் ரஸியாவும் பாட்டுப் பாடினார்கள்.

அப்புறம் மேரி ஒரு விளையாட்டுச் சொல்லித் தந்தாள்.

"நான் **கையை** என்று சொன்னால், உங்களில் ஒருவர் நீட்டு என்று சொல்லவேண்டும். அப்புறம் நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் பொருத்தமாக **நோட்டு, பாட்டு,** போல வார்த்தைகளைச் சேர்க்கவேண்டும்" என்றாள் மேரி.

மேரி **அடுப்பை** என்றாள். அஞ்சலை மூட்டு என்று முடித்தாள்! நாங்கள் புரிந்துகொண்டோம். அப்புறம் விளையாட்டு வளர்ந்து கொண்டே போயிற்று. **பால்—ஊட்டு; தொட்டில்—ஆட்டு; வண்டி—ஓட்டு; குப்பை—கூட்டு; நிலாவை—காட்டு; கதவை—பூட்டு; பூவை—சூட்டு; ஆஸ்பத்திரி—சீட்டு.**

அப்போது அப்பா அங்கே வந்தார்.

"யாருக்கு உங்கள்—" என்று கேட்டார்.

"**வோட்டு?**" என்று எல்லோருமாகச் சேர்ந்து கத்தினோம்!

அடுத்தபடி ஹமீது, "நான் இந்தத்தடவை ஆரம்பிக்கிறேன்." என்று சொல்லிச் செங்கோடனுக்குக் கண்சாடை காட்டினான்.

"இதைச்சொல்லாதவன்—" என்றான் ஹமீது.

"மண்டு" என்று முடித்தான் செங்கோடன். அப்புறம், ஊசி நூல்—கண்டு; துப்பாக்கி—குண்டு; பூஞ்சோலை—வண்டு; மேல்வேட்டி—துண்டு; வாழைமர—தண்டு; ஆற்றங்கரை—நண்டு; மெத்தை தலையணை—திண்டு; மல்லிகைப்பூ—செண்டு.

இப்போது அம்மா எட்டிப் பார்த்தாள். "சாப்பாடு—" என்றாள் அம்மா.

"உண்டு!" என்று எல்லோரும் இரைந்து கத்தினோம் சிரித்துக்கொண்டே உள்ளே சாப்பிடப் போனோம்.

## பயிற்சி

இந்த வரிசைக்கும் வார்த்தை சேர்த்துப்பார் :—

(1) கரும்பு—ஆலை; —ஓலை; —காலை
—சாலை; —சேலை; —சோலை
—மாலை; —மூலை.

(2) வெள் — ஆடு ; நஷ்ட — ; புத்தக—
பந்தயம்— ; சந்தன — ; குருவி —
கெட்ட — ; விழித்த — ; பொறுக்கும்—
காரை — ; காதில் — ; பாட்டு—
சக்கை— ; காளை — ; வாயை—
மணல்— ; வெயிலில்— ; எங்கள் —
தாய் — ; குஞ்சா — !

# பாடம் 19 பத்தொன்பது

## கிருஷ்ணன் வீடு

கிருஷ்ணன் அம்மா கூப்பிட்டாரே பக்ஷணம் தின்ன
அம்மா, பக்ஷணம் தின்ன !

கிருஷ்ணனுடன் விளையாடி அவன் கூடப் போகி
றேன்,
அம்மா, அவன் கூடப்போகிறேன்

கிருஷ்ணன் வீட்டில் தோட்டம் உண்டு வீட்டைச்
சுற்றிலும்,
அம்மா, வீட்டைச்சுற்றிலும்;

கிருஷ்ணன் நட்ட ரோஜாச்செடி நேற்றுப் பூத்தது.
அம்மா, ரோஜா நேற்றுப் பூத்தது.

கிருஷ்ணன் வீட்டில் சின்னஞ்சிறு காளைக்கன்றுண்டு
அம்மா, காளைக் கன்றுண்டு;

கிருஷ்ணனுடன் தாவித்தாவித் தெருவில் ஓடுமே
அம்மா, கன்று தெருவில் ஓடுமே.

கிருஷ்ணனுடைய சின்னத்தம்பி சிரித்துத் தவழு
வான்,
அம்மா, சிரித்துத் தவழுவான்;

கிருஷ்ணனைப்போல் என்னையும் அவன் கட்டிக்
கொள்ளுவான்.
அம்மா, தம்பி கட்டிக் கொள்ளுவான்.

கிருஷ்ணன் வீட்டில் பெரிய பெரிய பொம்மைகள்
உண்டு, அம்மா, பொம்மைகள் உண்டு;

கிருஷ்ணன் அந்த அறையைத் திறந்து எனக்குக் காட்டுவான்,
அம்மா, பொம்மை எனக்குக் காட்டுவான்.
கிருஷ்ணன் அம்மா தந்திடுவார் தின்னும் பண்டங்கள், அம்மா, தின்னும் பண்டங்கள்;
கிருஷ்ணனைப்போல் என்னிடமும் அன்பாய்ப் பேசுவார். அம்மா, அவர் அன்பாய்ப் பேசுவார்.
கிருஷ்ணன் வீட்டில் குதிரைகட்டிய வண்டி ஒன்றுண்டு, அம்மா, வண்டி ஒன்றுண்டு;
கிருஷ்ணனோடு வண்டியேற்றி வீட்டுக்கு அனுப்புவார். அம்மா, என்னை வீட்டுக்கனுப்புவார்.
கிருஷ்ணன் அம்மா கூப்பிட்டாரே பக்ஷணம் தின்ன, அம்மா, பக்ஷணம் தின்ன;
கிருஷ்ணனுடன் விளையாடி அவன்கூடப் போகிறேன், அம்மா, அவன்கூடப் போகிறேன்!

## பயிற்சி

I. வாக்கியங்களைப் பொறுக்கி எழுது :—

1. பக்ஷணம் தின்ன.
2. நான் பக்ஷணம் தின்பேன்.
3. அவன் கூட.
4. நான் அவன் கூடப் போகிறேன்.
5. வீட்டைச் சுற்றிலும்.
6. வீட்டைச் சுற்றிலும் தோட்டம் உண்டு.
7. கிருஷ்ணன் வீட்டில்.
8. வண்டியேற்றி.

9. கிருஷ்ணன் வீட்டில் நாங்கள் விளையாடப் போமுனும்.
10. அவர் என்னை வண்டியேற்றி வீட்டுக்கனுப்புவார்.

II. பன்மைச் சொற்களாக மாற்றி எழுது :—

அண்ணன், தம்பி, பொம்மை, குதிரை, நான், கூப்பிட்டான், வீடு, அவள், பேசுவான், பேசினேன், பண்டம், தெரு.

## பாடம் 20 இருபது



## நமது கூட்டாளி

கிராம வாழ்க்கை முதலில் சிங்காரத்துக்குப் பிடிக்கவேயில்லை. நாலுபுறமும் கடைகளையும் ஜனக் கூட்டத்தையும் பார்த்துப் பார்த்து அவனுக்குப் பழக்கம். அதிலும் அவனுக்குப் பெரிய குறையாக இருந்தது மோட்டார் வண்டியும் ட்ராமும் இங்கே இல்லாதது தான். வந்த புதிதில் மாட்டுவண்டியில் நாங்கள் சவாரி செய்தது அவனுக்குக் கேலியாக இருந்தது.

இப்போது எங்கள் மாடுகளுக்கும் சிங்காரத்துக்கும் மிகவும் சினேகம். எங்கள் வண்டிக் காளைகளோ மிகவும் சாது. அவனே வண்டியை ஓட்டினாலும் கூட அவை 'இடக்கு' செய்யாமல் போகும்; வேகமாகவே போகும். தன் கையினாலேயே இப்போது அவன் மாடுகளுக்குத் தீனி கலந்து வைக்கிறான்.

மனிதனும் மாடும் நல்ல கூட்டாளிகள் என்று அப்பா அடிக்கடிச் சொல்வார். நிலம் உழுவது, போர் அடிப்பது, வண்டி ஓட்டுவது—இதெல்லாம் மனிதனும் மாடும் சேர்ந்து செய்யும் காரியங்கள். அது மாத்திரம் அல்ல.

வயலை அறுவடை செய்தால், தானியம் நமக்கு உணவு; வைக்கோல் மாட்டுக்கு உணவு. புல்லும் இலை தழையும் மாட்டுக்கே.

நெல்லைக் குத்தினால், அரிசி நமக்கு; தவிடு மாட்டுக்கு. அரிசியைக் கழுவிய நீரும் வடித்த கஞ்சியும் மாட்டுக்கு; சோறு நமக்கு.

பருத்திச் செடியிலிருந்து கிடைக்கும் பருத்தி நமக்கு; கொட்டை மாட்டுக்கு. ஆட்டிய எள்ளில் எண்ணெய் நமக்கு; பிண்ணாக்கு மாட்டுக்கு. காய்களின் தோலும் பழங்களின் தோலும் மாட்டுக்கே.

மாடு இப்படி ஜீவித்து, வயலுக்குப் பொன் போல எருவைத் தருகிறது, நமக்கு அமுதம்போலப் பாலைத் தருகிறது.

நான் பட்டினி கிடந்தாலுமகூட அப்பா பொறுப்பார். மாடு பட்டினி கிடந்தால் பொறுப்பாரா?

### பயிற்சி

I. **விடை எழுது :—**

1. 'கிராம வாழ்க்கை முதலில் சிங்காரத்துக்குப் பிடிக்கவே யில்லை.' ஏன்?
2. அப்பா அடிக்கடி என்ன சொல்வார்?
3. மாடு வயலுக்கு என்ன தருகிறது?
4. அப்பா எதைப் பொறுக்கமாட்டார்?

II. **காலியான இடங்களை நிரப்பி எழுது :—**

1. வயலை —— செய்தால், —— நமக்கு உணவு; —— மாட்டுக்கு உணவு.
2. நெல்லைக் ——னல், —— நமக்கு; —— மாட்டுக்கு.
3. சோறு நமக்கு; அரிசியைக் —— நீரும் —— கஞ்சியும் மாட்டுக்கு.
4. பருத்தி ——; —— மாட்டுக்கு.
5. —— நமக்கு; பிண்ணுக்கு ——.
6. மாடு —— போலப் பாலைத் ——து.

# பாடம் 21 இருபத்தொன்று

## ஓநாய்

இன்றைக்கு எனக்குத் தின்பதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. நேற்றைக்கும் இப்படித்தான். சேர்ந்தாற்போல் இரண்டு நாள் பட்டினி கிடந்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்?

மறுபடியும் வெளியில் சுற்றினேன். குறுக்கே ஒரு சாலை. அங்கே என் கண்ணில் பட்டது யார் தெரியுமா? வாட்ட சாட்டமான ஒரு நாய்! அந்த நாய் வஞ்சனை இல்லாமல் வளர்ந்திருந்தது; நன்றாகச் சாப்பிட்டுக் 'கொழு கொழு' என்றிருந்தது!

"நான் பசியால் வாடுகிறேனே. உனக்குமாத்திரம் எது இவ்வளவு தீனி?" என்று அதைக் கேட்க வேண்டும்போல் இருந்தது. கேட்டுவிட்டேன்.

"ஐயோ பாவம்! என்னுடன் வா. நான் என் எஜமான் வீட்டைக் காவல் காக்கிறேன். அவர் எனக்கு நல்ல தீனி கொடுக்கிறார். நான் செய்யும் வேலையை நீயும் செய். உனக்கும் தினம்தோறும். அப்போது நிறையத் தீனி கிடைக்கும்," என்றது நாய்.

"சரி" என்று அதனோடுகூடப் போனேன். நமக்கும் சாப்பாடு கிடைக்கப் போகிறது என்று எனக்கு ஆசை!

போகும் வழியில் நாயின் கழுத்தைப் பார்த்தேன். என்னவோபோல் இருந்தது! கவனித்துப் பார்த்தேன். அதன் கழுத்தைச் சுற்றி வளைவாக மயிர் உதிர்ந்து கொட்டிப்போயிருந்தது! "ஏன் இப்படி?" என்றேன்.

"அதுவா? என் எஜமான் இரவில் என்னைச் சங்கிலிபோட்டுக் கட்டிவைக்கிறார் அல்லவா? அந்தக் கழுத்துப்பட்டை கழுத்தில் உராய்கிறது; உரா

யும் இடத்தில் மயிர் கொட்டுகிறது. அவ்வளவு தான்!”

எனக்கு அதைக் கேட்கத் திடுக்கிட்டது.

I. “ஓஹோ! கழுத்துப்பட்டையும் சங்கிலியுமா! அப்படியா சமாசாரம்? நான் போய்வருகிறேன், தம்பி. உன்னைப்போலக் கட்டிக்கிடக்க என்னால் ஆகாது. பட்டினி கிடந்தாலும் கிடப்பேன்; ஆனால் சுதந்திரமாக வாழ்வேன். போயும் போயும், தீனிக்கு ஆசைப்பட்டு....சீ!” என்று சொல்லிக்கொண்டே

II. ஓடி வந்துவிட்டேன்.

கஞ்சி குடித்தாலும் சுதந்திரமாக இருக்கவேண்டும். பாயசம் கிடைக்கிறது என்று போய் அடிமை ஆகலாமா?

## பயிற்சி

I. காலி இடங்களை நிரப்பி எழுது :—

1. சேர்ந்தாற்போல் இரண்டு நாள் —— உடம்பு என்னத்திற்கு ஆகும்?
2. அந்த நாய் —— வளர்ந்திருந்தது.
3. “——” என்று அதைக் கேட்கவேண்டும்போல் இருந்தது.
4. உனக்கும் தினந்தோறும் அப்போது —— கிடைக்கும்.
5. அதன் கழுத்தைச் சுற்றி —— மயிர் —— போயிருந்தது.
6. பட்டை கழுத்தில் —— இடத்தில் மயிர் ——.
7. கஞ்சி குடித்தாலும் —— வாழவேண்டும்.

II. **வாக்கியங்கள் அமைத்து எழுது :—**

| | |
|---|---|
| 1. நான் வீட்டை | உராய்கிறது. |
| 2. நாயின் கழுத்தை | வந்துவிட்டேன். |
| 3. பட்டை கழுத்தில் | அடிமை ஆகலாமா? |
| 4. நான் ஓடி. | நல்ல தீனி கொடுக்கிறார். |
| 5. தீனிக்கு ஆசைப்பட்டு | காவல் காக்கிறேன். |
| 6. அவர் எனக்கு | கவனித்துப் பார்த்தேன். |

# பாடம் 22 இருபத்திரண்டு



## பாப்பா பாட்டு

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே, பாப்பா!

சின்னஞ் சிறு குருவி போலே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா!

வண்ணப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!

கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடும் அந்தக் காக்காய்—அதற்
இரக்கப் படவேணும் பாப்பா!

பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்து வரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!

வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா!

வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரி முனை பாப்பா!
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா!

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி அழும் குழந்தை நொண்டி — நீ
திடம் கொண்டு போராடு பாப்பா!

பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறம் சொல்லலாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா!

—பாரதியார்

## பயிற்சி

I. இந்த அழகிய பாட்டை அழகாகப் பாடக் கற்றுக்கொள். (பாரதியாரைப் பற்றிய ரசமான விஷயங்களை உன் உபாத்தியாயர் உனக்குச் சொல்வார்.)

II. பொருத்தமான சொற்களைச் சேர்த்து வாக்கியங்களாக எழுது :—

1. சின்னஞ்சிறு
2. கொத்தித் திரியும்
3. எத்தித் திருடும்
4. வாலைக் குழைத்து வரும்
5. பாலைப் பொழிந்து தரும்
6. சோம்பல்
7. பொய்

# பாடம் 23 இருபத்துமூன்று

# தோப்பு

"நம்முடைய தோட்டத்து அவரைக் காயின் சுவை வேறு எதற்கும் வராது. சென்னையில் இதைப் போலக் கிடைப்பதில்லை, முத்து!" என்றான் சிங்காரம் ஒரு நாள்.

தை மாசியில் அவன் கொண்டுவரும் அவரைக் காயை அம்மா விதம் விதமாகச் சமைத்துப் போடுகிறாள்.

"நம் ஊர் மண்தான் சுவைக்குக் காரணம்" என்றேன்.

"நான் பாய்ச்சுகிற கேணித் தண்ணீர் காரணம் அல்லவா?" என்று சிரித்தான் சிங்காரம்.

"சென்னையில் தினம் எப்போது சமையல்?" என்று கேட்டார் அப்பா.

"காலையில் எட்டு-ஒன்பது மணிக்கு."

"காய்கறி வாங்குவது எப்போது?"

"முதல் நாள் சாயந்திரமே வாங்கி வைத்து விடுவேன்; காலையில் அப்பாவுடன் சேர்ந்து வாங்கப் போகிறதும் உண்டு."

"கடைக்கு அந்தக் காய்கறி எப்போது வருகிறது?"

"வெகு தூரத்திலிருந்து 'லாரி'யில் வந்து கொண்டே இருக்கிறது."

"பறித்து இரண்டு நாள் ஆன காயில் சுவை எப்படி இருக்கும்?" என்று கேட்டார் அப்பா.

"வாடிப்போன காயில் சத்துத்தான் ஏது?" என்ருள் அம்மா.

அவரைக் காய்க்கு அடுத்தபடி, முருங்கைக் கீரை என்ருல் சிங்காரத்துக்கு உயிர். நெய் சேர்த்து வதக்கிப் போட்டால்போதும். "அமுதம், அமுதம்!" என்று அதை அவன் சாப்பிடுவான்.

"இந்த ஊரில் எதைத் தின்ருலும் எனக்குச் சீரணம் ஆகிறது; சென்னையில் அதற்குக்கூட மருந்து தின்னவேண்டும் நான்!" என்பான்.

காரணம் அவனுக்கே தெரியும். படிப்பு அதிக நேரம் இல்லை. விளையாட்டு நேரம் அதிகம். அப்புறம் தோப்புக்கு ஓடி ஏற்றம் இறைப்பதில் அவனுக்கு அதிக ஆசை. இடைவிடாமல் உழைத்துக் கொண்டே இருந்தால் எதுதான் சீரணம் ஆகாது? வரும்போது அடுப்புக்கு ஆகும் என்று தென்னை மட்டை, பனை மட்டை, எதையாவது கட்டித் தலையில் என்னைப்போல் சுமை தூக்கிவருவான். அந்த நேரம் தோப்பில் அப்பா இருந்தால் எங்களுக்கு இளநீரோ பனநுங்கோ நிச்சயம் கிடைக்கும்.

அவன் நட்ட பூச்செடிகளில் ரோஜாச்செடி பூத்தபோது அவனுக்கு எவ்வளவோ ஆனந்தம்!

ஆனால் மாம்பழமும், பலாப்பழமும் பழுப்ப தற்குமுன் ஊருக்குப் போய்விடவேண்டுமே என்று அவனுக்கு வருத்தம். எனக்கும் கூடத்தான்!

## பயிற்சி

I. காலி இடங்களை நிரப்பி எழுது:—

1. நம் —— அவரைக் காயின் ——வேறு எதற்கும் வராது.
2. —— காயில் சத்துத்தான் ஏது?
3. முருங்கைக் கீரை என்றால் சிங்காரத்துக்கு ——.
4. இந்த ஊரில் எதைத் தின்றாலும் எனக்கு ——.
5. ஏற்றம் —— அவனுக்கு அதிக ஆசை.
6. ரோஜாப்பூ —— அவனுக்கு எவ்வளவோ ஆனந்தம்!
7. ——க்கு முன் ஊருக்குப் போய்விடவேண்டுமே என்று அவனுக்கு ——.

II. பொருத்தமான வாக்கியங்கள் அமைத்து எழுது:—

1. அம்மா விதம் விதமாக.......................
2. சிங்காரம் இடைவிடாமல்.......................
3. முத்துவுக்கு சிங்காரம்.......................
4. ரோஜாப்பூவைப் பார்க்க.......................
5. மாம்பழம் பழுப்பதற்குமுன்.......................
6. முருங்கைக் கீரை என்றால்.......................

# பாடம் 24 இருபத்துநான்கு



## பழங்கள்

பழக்கடைக்குப் போவேன் நான்—என்
பைகள் நிறைய பணத்துடனே!

சீப்புச் சீப்பாய் வாழைப்பழம்
பூவன் பேயன் ரஸ்தாளி
ராஜா வாழை செவ்வாழை
பச்சை வாழை மலைவாழை
ஒட்டு மாம்பழம் நாட்டுப்பழம்
அணி அணியாகவே ஆரஞ்சு
ஆப்பில் மாதுளை அன்னாசி
தர்ப்பூசனிப் பழம் தக்காளி
தின்னத் தின்னத் தெவிட்டாத
திராட்சைக் குலையும் மலை மலையாய்ப்
பலாப் பழங்களும் பார்ப்பேன் நான்!

நாவல் பேரி முந்திரி
இலந்தை கொய்யா ஈச்சை
விளாம்பழம் முலாம்பழம் வெள்ளரிப்பழம்
வெளியில் குவியலாய்க் காண்பேனே !

வகைக்குக் கொஞ்சம் விலை கேட்டு
ருசித்துப் பார்த்து வாங்கியபின்
வீட்டில் யார்க்கும் தந்திடுவேன்,
வயிறு நிரம்பத் தின்றிடுவேன் !

## பாடம் 25 இருபத்தைந்து
## தொழில்கள் (சம்பாஷணை)

I

அப்துல்: செங்கோடா ! உன் புது வீடு கட்டி முடிந்துவிட்டதா ?

செங்கோடன்: அநேகமாக முடிந்தாற்போலத் தான்.

அப்துல்: அப்படி என்றால்? என்ன வேலை பாக்கி?

முத்து: நான் சொல்கிறேன்: வர்ணம் பூச வேண்டியது ஒன்றுதான் பாக்கி.

டேவிட்: வர்ணம் மெதுவாகப் பூசிக்கொள்ளலாமே. குடி மாற்றிப் போய்விட்டீர்கள் அல்லவா?

செங்கோடன்: இல்லை. நல்ல நாள் பார்த்துப் போகவேண்டுமாம்.

சிங்காரம்: நம்மையெல்லாம் கூப்பிடாமல் புது வீட்டுக்குக் குடி போய்விடுவாயா செங்கோடன்?

ஹமீது: ஏன்? நம்முடைய உத்திரவு எதற்கு?

சிங்காரம்: நமக்கெல்லாம் அவன் விருந்து வைக்க வேண்டாமா?

அப்துல்: அப்படியானால் விருந்தை முதலில் வைக்கச் சொல்லு! வர்ணம் மெதுவாகப் பூசிக்கொள்ளலாம்!

டேவிட்: ஆமாம்! பூசிய புது வர்ணம் உடனே நம் கைபட்டு அழியாமல் இருக்கும்; விருந்துச் சாப்பாடும் சீக்கிரம் கிடைக்கும்!

அப்துல்: வீடு கட்டச் செலவு என்ன ஆயிற்றும்? உனக்குத் தெரியுமா, செங்கோடா?

செங்கோடன்: ஒன்பதினாயிரம் ரூபாயாம்.

ஹமீது: அவ்வளவுதானா? அவ்வளவு பெரிய வீட்டுக்கு!

செங்கோடன்: மரம் எல்லாம் சொந்தத் தோப்பு மரம். செங்கல் சூளையும் சொந்தத்தில் போட்டது.

அப்துல்: என் வீட்டுச் சுவர் மண் சுவர். அதைக் கட்டிமுடிக்க ஐந்நூறு ரூபாய்க்குமேல் ஆகியிருக்காது!

சிங்காரம்: சென்னையிலுள்ள எங்கள் வீட்டுச் சுவர் கல் சுவரும் அல்ல, மண் சுவரும் அல்ல.

முத்து: பின்னே என்னவாம்?

ஹமீது: எனக்குத் தெரியும்; சிமிட்டியாக இருக்கும். அதுதானே?

சிங்காரம்: ஆமாம். அஸ்திவாரம் முதல், மேல் மாடி வரை, அத்தனையும் சிமிட்டி.

முத்து: நான் அன்றைக்குப் பார்த்தேன்: செங்கோடன் வீட்டுத் தளவரிசையில் நடு நடுவே தாமரைப் பூப் போலப் போட்டிருக்கிறது!

டேவிட்: கோலமா?

செங்கோடன்: கோலம் அல்ல: வர்ணக்கல்; பளிங்குக்கல்; தண்ணீர் பட்டாலும் அழியாது.

டேவிட்: மாடி உண்டா?

சிங்காரம்: உண்டு. மாடியில் இரண்டு அறைகள்.

முத்து: என் வீடு ஓட்டுவில்லை வீடு.

அப்துல்: என் வீடு குடிசை; மேலே தென்னங் கீத்தும் வைக்கோலும்!

செங்கோடன்: அதுதான் பனிக் காலத்தும் நம் நல்லது; வெய்யில் நாளிலும் குளிர்ச்சியாக இருக்கும்.

ஹமீது: கதவு, ஜன்னல், எல்லாம் பொருத்தி ஆகி விட்டதா?

செங்கோடன்: ஆஹா!

முத்து: உனக்குத் தெரியுமா அப்துல்? நம் மாரியப்பன் இருக்கிறானே; அவன் அப்பாதான் நிலைக்கதவு, தூண் உத்திரம், எல்லாம் வேலைசெய்து கொடுத்தார்.

டேவிட்: தச்சு வேலை வெகு அழகாக அவர் செய்வாரே! மரத்திலேயே கிளி, அன்னப் பறவை, பூங்கொடி, தாமரைப் பூ, எல்லாம் அவர் அழகாகச் செதுக்குவார்.

ஹமீது: ஆமாம், நான் பார்த்திருக்கிறேன், அவர் வேலை செய்வதை.

அப்துல்: கொல்லு வேலை யார் செய்தது?

முத்து: ஆறும் கிளாஸ் படிக்கிறாளே தங்கம்மாள்; அவள் அப்பா.

செங்கோடன்: ஜன்னல் கம்பி, தாழ்ப்பாள், இரும்புச் சட்டம், இதெல்லாம் அளவு எடுத்து அவர் கொல்லுப் பட்ட

றையில் தயார் செய்தார்; இங்கே கொண்டு வைத்து, முடுக்கினூர்.

சிங்காரம்: உலையில் இரும்பைக் காய்ச்சி அடித்து அவர் உருவாக்குவதைத் தான் தினம் நாம் பார்க்கிறோமே.

செங்கோடன்: நம் ஊர் நல்ல ஊர். எல்லா வேலை செய்கிறவர்களும் நம் ஊரிலேயே இருக்கிறார்கள்.

முத்து: அது தான் இல்லை!

செங்கோடன்: எப்படி? இதை யெல்லாம் விட வேறே என்ன வேலை உண்டு?

முத்து: முக்கியமாகப் பொன் வேலையும் கிடையாது; மண் வேலையும் கிடையாது.

செங்கோடன்: ஏன் அப்படி?

முத்து: சோமுப் பத்தர் பொன் வெள்ளி நகைகள் நன்றாகச் செய்வார். அவர் சென்னைக்குப் போய் விட்டார், வேலைபார்க்க.

சிங்காரம்: மண் வேலை? இந்த ஊரில் குயவனர் கிடையாதா?

அப்துல்: இருக்கிறார். அவர் தொழிலை விட்டு விட்டார்; இங்கிலீஷ் படித்துச் சர்க்கார் உத்தியோகம் பார்க்கிறார்.

சிங்காரம்: சட்டி பானை?

ஹமீது: சந்தையில் வாங்கிக்கொள்கிறோம்.

## பயிற்சி

I. முழு வாக்கியங்கள் அமைத்து எழுது :—

1. ....................அழியாமல் இருக்கும்.
2. ....................மேல் ஆகியிருக்காது.
3. ............ ....குளிர்ச்சியாக இருக்கும்.
4. ....................பட்டறையில் தயார் செய்தார்.
5. ....................உத்தியோகம் பார்க்கிறார்.
6. ....................வாங்கிக்கொள்கிறோம்.

II. கீழ்க்கண்ட சாமான்களைச் செய்பவர் யார் என்று எழுது :—

| | |
|---|---|
| நிலைக்கதவு | தச்சன் |
| ஜன்னல் கம்பி | |
| மரத்தூண் | |
| இருப்புச் சட்டம் | |
| மரக்கிளி | |
| பொன் சங்கிலி | |
| வெள்ளிக் காப்பு | |
| சட்டி பானை | |

# பாடம் 26 இருபத்தாறு

## தொழில்கள் (சம்பாஷணை)

### II

வீட்டுவிட்: நம் ஊர் நாட்டுப்புறம். இருந்தாலும் பாலுக்கு இங்கே பஞ்சம்.

முத்து: என்னைப்போலச் சொந்தத்தில் நீ மாடு வைத்துக் கொள்ள வேண்டும்.

சிங்காரம்: கறவை மாடுதான் இந்த ஊரில், நூற்றுக் கணக்கில் பார்க்கிறோமே!

டேவிட்: மாடு இருந்து என்ன? பால் அத்தனையும் அப்படியே 'டவுனு'க்குப் போய்விடுகிறது.

அப்துல்: எங்கள் வீட்டுப் பசு இரண்டாவது கன்று போட்டிருக்கிறது.

செங்கோடன்: என் அப்பா ஒரு பெரிய எருமை வாங்கியிருக்கிறார்.

சிங்காரம்: அப்போது தயிரும் சோறுமாகவே நீ சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம்.

ஹமீது: மருதமுத்து ஏன் பள்ளிக்கூடம் வரவில்லை? படிப்பை நிறுத்தி விட்டானா?

டேவிட்: நிறுத்தவில்லை. 'டவுனி'ல் படிக்கிறான்.

ஹமீது: ஏன்?

டேவிட்: அவன் அப்பா அங்கே ஒரு சலவைத் தொழிற்சாலை ஆரம்பித்திருக்கிறார்.

முத்து: நான் பார்த்தேன். அங்கே தங்[கராஜு]வையும்கூடப் பார்த்தேன்.

சிங்காரம்: யார் அது, தங்கராஜு?

அப்துல்: இந்த ஊர்க்காரன். இப்போது 'டவுனி'ல் வேலை செய்கிறன். அவன் தாத்தா இந்த ஊர் வைத்தியர்: நல்ல கைராசிக்காரர்.

முத்து: ஆமாம். எத்தனை நாற்காலியும் படமும் நிலக்கண்ணாடியும் தெரியுமா தங்கராஜு கடையில்!

சிங்காரம்: ரேடியோ இருக்கிறதா?

முத்து: அது ஒன்றுதான் இல்லை.

ஹமீது: உன் வீட்டில் ரேடியோ வைக்கப் போகிறாரா உன் அப்பா, செங்கோடா!

செங்கோடன்: இந்த ஊருக்கு 'லைட்' போட்டதும் ஒரு ரேடியோப் பெட்டி வாங்கி விடுவதாகச் சொல்கிறார்.

ஹமீது: உன் வீட்டில் அழகான பித்தளை. ஜெர்மன் சில்வர், வேலைப்பாடு ஒன்றும் கிடையாதா?

டேவிட்: நீ ஏன் கேட்கிறாய் என்று எனக்குத் தெரியும்!

முத்து: எனக்கும் தெரியும்! உன் அப்பாவுக்கு அந்த மாதிரி வேலை

எல்லாம் நன்ருகத் தெரியும் அல்லவா ?

ஹமீது: கண்ணுடி பதிக்கும் வேலையும் அவர் செய்வார்.

செங்கோடன்: இப்போது நினைவு வருகிறது. உன் அப்பா பெயர் முஹம்மது காசிமா ?

ஹமீது: ஆமாம்! உனக்கு எப்படித் தெரியும்?

செங்கோடன்: அலமாரிக்குக் குமிழ், கைப்பிடி, வண்டியில் கம்பி, வளையம், இதை யெல்லாம் பற்றி அம்மா கேட்டாள். முஹம்மது காசிம் என்கிறவர் அந்த வேலையைச் செய்வ தாக ஒப்புக்கொண்டிருக்கிருராம். அப்பா பதில் சொன்னுர். என் காதில் விழுந்தது.

சிங்காரம்: பலே! அது இருக்கட்டும், நான் சென்னை போவதற்குள் எனக்கு அந்த விருந்து கிடைக்குமா, செங்கோடா ?

செங்கோடன்: அத்தனை நாள் எதற்கு? இந்தமாதக் கடைசியிலேயே கிடைக்கும்.

முத்து: நான் வந்து எல்லோரையும் கூப்பிடு கிறேன், மறக்காமல் வாருங்கள் !

## பயிற்சி

I. வாக்கியங்கள் அமைத்து எழுது :—

| | |
|---|---|
| 1. பால் அத்தனையும் | அவர் நன்ருகச் செய்வார். |
| 2. உன் அப்பா | எனக்கு விருந்து கிடைக்குமா? |
| 3. 'லைட்' போட்டதும் | சலவை வேலை செய்வாரா? |
| 4. கண்ணாடி பதிக்கும் வேலை | என் காதில் விழுந்தது. |
| 5. அப்பாச் சொன்னது | எல்லோரையும் கூப்பிடுவான். |
| 6. நான் போவதற்குள் | வெளியூருக்குப் போய்விடுகிறது. |
| 7. அவன் வந்து | ரேடியோ வாங்கப் போகிருேம். |

II. விடை எழுது :—

1. நாட்டுப்புறத்தில் பாலுக்கு ஏன் பஞ்சம்?
2. மருதமுத்து ஏன் 'டவுனி'ல் படிக்கிருன்?
3. செங்கோடன் வீட்டில் ஏன் ரேடியோ இல்லை?
4. ஹமீதின் அப்பாவுக்கு என்ன வேலை தெரியும்?
5. அவர் பெயர் என்ன?

# பாடம் 27 இருபத்தேழு

## நாடகம்

நாலுபேர் சேர்ந்து நாடகம் போட்டால்,
நான்தான் ராஜா பாருங்கள்!
என் தலையில் பெரிய முண்டாசு,
கையில் மெல்லிய பிரம்புத்தடி;
முண்டாசே என் தங்கக் கிரீடம்,
பிரம்புத்தடி என் செங்கோல்!

நாலுபேர் சேர்ந்து நாடகம் போட்டால்,
நான்தான் நாரதர் பாருங்கள்!
என் தலையில் பெரிய முண்டாசு,
கையில் மெல்லிய பிரம்புத்தடி;
முண்டாசே என் சடையும் முடியும்,
பிரம்புத்தடி என் வீணை!

நாலுபேர் சேர்ந்து நாடகம் போட்டால்,
நான்தான் மாயாவி பாருங்கள்!
என் தலையில் பெரிய முண்டாசு,
கையில் மெல்லிய பிரம்புத்தடி;
முண்டாசே என் மந்திரப் போர்வை
பிரம்புத்தடி என் மாந்திரைக் கோல்!

நாலுபேர் சேர்ந்து நாடகம் போட்டால்,
நான்தான் சிப்பாய் பாருங்கள்!
என் தலையில் பெரிய முண்டாசு,
கையில் மெல்லிய பிரம்புத்தடி;
முண்டாசே என் ராணுவத் தொப்பி,
பிரம்புத்தடி என் துப்பாக்கி!

நாலுபேர் சேர்ந்து நாடகம் போட்டால்,
நான்தான் கோமாளி பாருங்கள்!
என் தலையில் பெரிய முண்டாசு,
கையில் மெல்லிய பிரம்புத்தடி;
முண்டாசே என் கோணங்கிக் குல்லா,
பிரம்புத்தடி என் குரங்குக் குட்டி!

கால் கடுக்க அலைகின்றேன்—
என்னை
அழைத்துப் பேசு
வார் காணேனே,
ஆதரிப்போர் காணேனே,
உம்முடைய அடிமை நான்,
உம்மைத் தேடி வந்தேன் நான்,
உண்மையுள்ள நண்பன் நான்,
உவந்தே என்
னுடன் பேசிடுவீர்!



மான்: நரியாரே, நல்ல நரியாரே,
நாகரிக நரியாரே,
நயமாய்ப் பேசும் நரியாரே—என்
நன்மையை நாடும் நரியாரே,
நெருங்கிய நண்பர் இரண்டொருவர்,
நெடுநாள் என்னுடன் இருப்பவர்கள்.

புதிதாய் வந்தீர் நீர் இன்று,
புதுப் பழக்கம் ஏன் எனக்கு?
போதும் உள்ள நண்பர்கள்,
போய்வாரும் நீர் இப்பொழுதே!

நரி: காக்கையார் உம் நண்பர் என்றால்
காலையில் வெளியில் போய்விடுவார்;
ஆமையார் உம் நண்பர் என்றால்,
ஆழ்ந்த நீரில் அமிழ்ந்திடுவார்;
உம்முடனே நான் நாள் முழுதும்
ஓடி விளை யாடிடுவேன்,
என்னுடன் இன்று வந்திடுவீர்,
நல்ல நல்ல புல் இருக்கும்
நன்செய் நிலத்தைப் பார்த்திடுவீர்,
வயிரார நீர் உண்டிடுவீர்
—என்னை
வாழ்த்தி வாழ்த்தி மகிழ்ந்திடுவீர்!

மான்: காக்கையாரைக் கண்டொரு சொல்
கூறிவிட்டு வருகின்றேன்.

நரி: காக்கையை முதல்
முதல் கண்டதினம்
காக்கை உமக்குப் புதியவரே;
காக்கை உம்முடன் பழகியதுபோல்
நானும் பழகிப் போய்விடுவேன்;
நம்பி நீர் வாரும் என்னுடனே!

(மான் நரியுடன் செல்கிறது)

## (2) நெல் வயல்

மான்: நரியாரே, நல்ல நரியாரே,
என் செய்வேன் நான் நரியாரே?
வலையில் மாட்டிக் கொண்டேனே
—தப்பும்
வழி ஒன்றும் நான் காணேனே!



நரி: வலையில் மாட்டிக் கொண்டீரோ?
ஐயோ பாவம், என் செய்வேன்!

மான்: பார்த்துச் சும்மா நிற்காதீர்,
பல்லால் கடித்தால் வலை அறுகும்;
வலையை அறுத்துக் காப்பாற்றும்,
வணங்கி உம்மைக் கும்பிடுவேன்.

நரி: தோலைக் கிழித்து வார் ஆக்கித்
தொடுத்துப் பின்னிய வலை இதுவாம்.
தோலைக் கடித்தால் தோஷம், ஐயா:

ஏகாதசி இன்றெனக்கு,
பட்டினி இருந்து விரதம் காத்துப்
பாரணை நாளை செய்திடுவேன்.

(தனக்குள்)

பல நாளாகக் காத்திருந்து—எதிர்
பார்த்திருந்த சமயம் இது.
மான் இங்கேயே சாகட்டும்—அதை
விலாப் புடைக்கத் தின்றிடுவேன்—இவ்
வாரம் முழுதும் விருந்தெனக்கு—இம்
மரத்தின் பொந்தில் ஒளிந்திருப்பேன்.



(காக்கை வருகிறது)

காக்கை: என்ன சூது இது மானே?
எப்படி வலையில் விழுந்திட்டாய்?
மான்: நரியார் செய்த மோசம் இது,
நரியை நம்பினால் நாசம்தான்!
காக்கை: நல்ல நண்பன் நரி என்றாய்—அந்
நரியை இங்கே காணேமே!

மான்: வலையைக் கடித்துக் காப்பாற்று—என்று
வேண்டிக் கொண்டேன் நரியை நான்;
தோலைக் கடித்தால் தோஷமென்று
புதரில் எங்கோ பதுங்கிற்று.



காக்கை: கண்ணை மூடிப் படுத்திரு நீ—உன்
கட்டை வேடன் அவிழ்த்திடுவான்,
செத்தவன் நீ என நினைத்திடுவான்,
கயிற்றைத் தனியே சுருட்டிடுவான்,
சட்டெனவே நீ தப்பிடலாம்!

(வேடன் வருகிறான்)

வேடன்: வலையில் சிக்கிய மான் செத்து
விழுந்து கிடக்கக் காண்கின்றேன்,
வலையை அவிழ்த்துச் சுருட்டியபின்
மானைத் தூக்கிச் செல்வேனே.



(மான் ஓடுகிறது. வேடன் தடியை வீசுகிறான், நரி எதிரே வருகிறது)

வேடிக்கை, இது வேடிக்கை!
மானோ தப்பி ஓடியதே,
தடியை வீசி விட்டெறிந்தேன்,
புதரில் இருந்து புறப்பட்ட—ஒரு
நரி அடிபட்டுச் செத்தது காண்!
வேடிக்கை, நல்ல வேடிக்கை!

## பயிற்சி

I. இந்த நாடகத்தைப் பிள்ளைகள் நடித்துக் காட்ட வேண்டும்.

II. இந்தக் கதையை உன் தங்கைக்குச் சொல்வதுபோல் சொல்லு; பிறகு, அப்படியே எழுது.

III. முற்றுப்புள்ளி (.) எங்கே போடவேண்டும்? முற்றுப்புள்ளி போடவேண்டிய இடத்தில் போட்டு எழுது:—

1. வேகமாய்த் தாவும்
2. நான் காட்டில் தனியாய்த் திரிகின்றேன்

3. உண்மையுள்ள நண்பன்
4. அவன் என்னைத் தேடி வந்தான்
5. நீர் போய் வாரும்
6. அமிழ்ந்திடுவார்
7. நாள் முழுதும்
8. நான் வயிறார உண்டிடுவேன்
9. பல்லால் கடித்தால்
10. நரியை நம்பினால் மோசம்தான்
11. வேடன் கட்டை அவிழ்த்திடுவான்
12. தடியை வீசி

## பாடம் 29 இருபத்தொன்பது

## வண்டு

'ரீங்! ரீங்!' என்று சத்தமிட்டேன். காடு முழுவதும் சுற்றி வந்தேன். எனக்கு இன்றைக்கு உற்சாகம் அதிகம்.

சிங்கம் ஒன்று இரை தின்றுவிட்டுப் படுத்திருந்தது. "என்னோடு சண்டை போட உன்னால் முடியுமா?" என்று கேட்டேன் அந்தச் சிங்கத்தை.

"சரி" என்றது சிங்கம்; நிமிர்ந்து நின்று ஒரு கர்ஜனை செய்தது; வாலை இரு புறமும் ஆட்டியது; என்மேல் பாயத் தயார் ஆயிற்று.

அப்படியே பறந்து வந்து என் கொடுக்கால் சிங்கத்தின் மூக்கில் கொட்டினேன். சிங்கத்துக்கு வலி தாங்கவில்லை; தன் வலது முன் காலால் மூக்



கைத் தடவிக் கொடுத்தது. என்னைப் பிடிக்க இப்படி-யும் அப்படியுமாகத் தாவியது. அதனிடம் அகப் பட்டுக் கொள்வேனா நான்?

சுற்றிச் சுற்றிப் பறந்தேன். சிங்கத்தின் உடம் பில் மேலும் நாலு இடத்தில் கொட்டினேன். சிங்கம் வலி தாங்காமல் அலறிற்று. அதற்குப் பைத் தியம் பிடித்ததுபோல் ஆயிற்று.

"நான் தோற்றுவிட்டேன்! விட்டு விடு! விட்டு விடு!" என்று அழுதது சிங்கம். "அப்படி வா வழிக்கு!" என்று பாடிக்கொண்டே பறந்தேன். என்னைப்போல வெற்றி வீரன் யார்?

இதென்ன இது! வெகு தூரம் பறந்து வந்த எனக்குச் சட்டென்று இறக்கையை அசைக்க முடிய வில்லை! காலைக்கூட யாரோ கட்டிவிட்டார்களே!

ஓஹோ ஹோ! இது சிலந்தி பின்னிய வலை! அதில் வகையாக நான் சிக்கிக் கொண்டு விட்டேன்!



அதோ, என்னைக் கடித்துத் தின்ன அந்தச் சிலந்தி வந்துவிட்டது. அதன் கண்ணைப் பார்த் தாலே என் உடம்பு நடுங்குகிறது!

என் கர்வம் இப்படியா ஆகவேண்டும்? சிங்கத் தையே ஜயித்தவன் நான்; என்னை ஒரு அற்பப் பூச்சி ஜயித்துக் கொல்கிறதே!

நீங்கள் யாரும் என்னைக் காப்பாற்ற மாட்டீர் களா? ஹோ!

## பயிற்சி

I. முழு வாக்கியங்கள் அமைத்து எழுது :—

1. சிங்கம் இரை தின்றுவிட்டு ——.
2. சிங்கத்துக்கு வலி ——.
3. சிங்கம் வலி தாங்காமல் ——.
4. என் காலை யாரோ ——!
5. சிங்கத்தையே ஜயித்த என்னை —— !

II. கீழ்க்கண்ட வாக்கியங்களை, குறிப்பிட்டபடி மாற்றி அமைத்து எழுது :—

**காடு முழுவதும் சுற்றி வந்தேன்.**

**வண்டு காடு முழுவதும் சுற்றி வந்தது.**

1. சிங்கத்தின் மூக்கில் கொட்டினேன்.
2. நான் அதனிடம் அகப்பட்டுக் கொள்வேனா?
3. சுற்றிச் சுற்றிப் பறந்தேன்.
4. வகையாக நான் சிக்கிக்கொண்டுவிட்டேன்.
5. சிலந்தியின் கண்ணைப் பார்த்து நான் நடுங்கினேன்.

## பாடம் 30 முப்பது



## பரிசளிப்பு

பெரிய இன்ஸ்பெக்டர் வருகிறார்! இன்றைக்கு எங்கள் பள்ளிக்கூடத்தில் பரிசளிப்பு விழா!

வாழை மரம், தென்னங் குருத்து, மாவிலைத் தோரணம்—எல்லாம் கட்டி வைத்திருக்கிறோம். சுண்ணாம்பு அடித்து வர்ணம் பூசின எங்கள் பள்ளிக்

கூடத்தைப் பாருங்கள்! கல்யாண வீடு போல இல்லையா?

நான் புது நிஜாரும் சட்டையும் போட்டுக் கொண்டிருக்கிறேன்!

அதோ, இன்ஸ்பெக்டர் கொடி ஏற்றுவிக்கிறார்.

அஞ்சலையும் ரஸியாவும் இன்று வெகு அழகாகப் பாடுகிறார்கள்; பாட்டுக்காகப் பரிசு அவர்கள் பெறப் போகிறார்கள் அல்லவா!

வரவேற்புப் பத்திரம் படித்துத் தருகிறாள் மேரி. அவள் குரலில் எத்தனைத் தெளிவு! எத்தனை இனிமை! இன்றைக்கு நாங்கள் போடப் போகும் நாடகத்தில் அவளுக்கு ராணி வேஷம்; அதற்கு அவள் பரிசு பெறுவது நிச்சயம்!

படிப்பு நேரத்தில் படிப்பு, விளையாட்டு நேரத்தில் விளையாட்டு; குறித்த நேரம் தவறாமல் பள்ளிக்கூடம்; எப்போதும் சுத்தமான உடம்பு, துணி மணி—இப்படி இருந்தால் என் படிப்பில் முதல் பரிசு வாங்கக் கூடாது? எப்போதுமே சிரித்த முகத்துடன் இருப்பான் அப்துல். இன்று அவன் அந்த முதல் பரிசு வாங்கித் திரும்பும்போது மேலும் எவ்வளவு பிரகாசமாய் இருந்தது அவன் முகம்!

கையெழுத்துக்கும் சித்திரத்துக்கும் பரிசு ஹரிதுக்கு. கணக்குப் பரிசு, கணக்கில் நூற்றுக்கு நூறு வாங்கிய செங்கோடனுக்கு. ஓட்டம், விளையாட்டு, இவற்றில் டேவிடுக்கும் எனக்கும்தான் பரிசுகள் அதிகம்.

உருளைக்கிழங்கு பொறுக்குவதில் வள்ளி யம்மைக்குக்கூட ஒரு சின்னப் பரிசு!

இன்ஸ்பெக்டரும் ஹெட்மாஸ்டரும் ஏதோ தனியாகப் பேசுகிறார்கள். என் வகுப்பு ஆசிரியர் சொல்வதற்கு ஹெட்மாஸ்டர் 'சரி' என்று தலை யாட்டுகிறார். அவர் என்ன சொல்லப் போகிறாரோ, கேட்போம்.

"உத்தம மாணவன் என்ற பெயரும் இவ் வருஷம் நன்னடத்தைக்கான விசேஷப்பரிசும்— மூன்றாம் வகுப்பு எம். சிங்காரம்!"

அத்தான் பரிசு வாங்கும்போது எல்லோரும் பலக்கக் கை தட்டுகிறோம்! அவன் பரிசு வாங்கி யதில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சந்தோஷம் அதிகமா, பள்ளிக்கூடப் பிள்ளைகளாகிய எங்களுக்குச் சந்தோஷம் அதிகமா, யார் சொல்ல முடியும்?

## பயிற்சி

I. *கீழ்க்கண்டவர்கள் எதற்குப் பரிசு பெற்றார்கள் என்று எழுது:—*

1. அஞ்சலையும் ரஸியாவும்
2. மேரி
3. அப்துல்
4. ஹமீது
5. செங்கோடன்
6. டேவிடும் முத்துவும்
7. வள்ளியம்மை
8. சிங்காரம்

II. முற்றுப்புள்ளி போடவேண்டிய இடத்தில் போட்டு எழுது :—

1. எங்கள் பள்ளிக்கூடத்தில் இன்றைக்குப் பரிசளிப்பு விழா
2. புது நிஜாரும் சட்டையும்
3. இன்ஸ்பெக்டர் கொடி ஏற்றுவிக்கிறார்
4. ஏன் முதல் பரிசு வாங்கக்கூடாது என்று சொல்லு
5. எப்போதுமே சிரித்த முகத்துடன்
6. இன்ஸ்பெக்டரும் ஹெட்மாஸ்டரும் ஏதோ தனியாகப் பேசுகிறார்கள்
7. அத்தான் பரிசு வாங்கும்போது

# பாடம் 31 முப்பத்தொன்று



## கும்மி

கும்மியடி தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி ;

நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி.

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோம் என்று கும்மியடி;
சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்.

காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கை கொடுத்து,
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி.

(கும்மியடி)
—பாரதியார்

## பயிற்சி

1. வகுப்புப் பெண் குழந்தைகள் இந்த அழகிய பாட்டைப் பாடிக்கொண்டு கும்மியடிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்; எல்லாப் பிள்ளைகளும் இதை அழகாகப் பாடக் கற்றுக் கொள்ளவேண்டும்.

பெண்கள் என்னென்ன செய்வார்கள் என்று பாரதியார் சொல்லுகிறார்?

III. **வாக்கியங்கள் அமைத்து எழுது :—**

1. நம்மைப் —— பிசாசுகள் ——.
2. அறிவில் ஆணுக்கு பெண் ——.
3. வேதம் —— நீதிகள் —— பெண்களுக்குத் திறமை உண்டு.
4. அறங்கள் ——ச் செய்திடுவோம்.

# பாடம் 32 முப்பத்திரண்டு



## பிரயாணம்

ஸ்டேஷனில் ரெயில் வண்டிக்காகக் காத்திருக்கிறோம். இங்கே ஒரே கூட்டம்! பெரும்பாலும் சிறு பிள்ளைகள். நாங்கள் வந்தது ரெயில் ஏறுவதற்காக அல்ல; அத்தானை வழி அனுப்ப.

வந்த ஒரு மாதத்தில், ஊரில் உள்ள அத்தனைப் பேரும் அத்தானைத் தெரிந்துகொண்டுவிட்டார்கள். அவன் பேச்சில் தனியான ஒரு நயம், ஒரு பணிவு,

ஒரு வேடிக்கை, கலந்திருக்கும். இனிமையான சொல், தன்னாலான சின்ன உதவி — இதில் அத்தான் என்றும் தவறியதில்லை. சிங்காரம் போல நாமும் ஆகவேண்டும் என்று எங்களில் எத்தனையோ பேருக்கு ஆசை.

அத்தான் இந்த ஊருக்கு வந்தது உடம்பு தேறுவதற்காக. இந்த ஊர் அவனுக்குப் பிடித்து விட்டது. மார்கழி விடுமுறைக்குக்கூட அவன் சென்னை போகவில்லை. அவன் அப்பா அம்மாதான் இங்கே வந்து அவனைப் பார்த்துவிட்டுப் போனார்கள். அவனோடு சேர்ந்து சாப்பிட்டுப் படித்து விளையாடிவந்த எனக்கு அவன் இல்லாமல் இனிமேல் எப்படி இருக்கும்?

நாட்டுப்புறத்தில் அவனுக்கு ஏற்பட்ட பழக்க வழக்கம் இனிமேல் அவனை விடாது. ஆரோக்கிய வாழ்வுக்கான வழிகளை அவன் தெரிந்துகொண்டு விட்டான். ஜனக்கூட்டம் நிறைந்த சென்னையில் கூட இனி அவனுக்கு நோய் எதுவும் வராது.

சிரித்துத்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் சிநேகிதனை விட்டுப் பிரிவதில் எங்களுக்கு உள்ள ஏக்கம் சொல்லி முடியாது. ஒவ்வொரு விடுமுறைக்கும் தவறாமல் இந்த ஊருக்கு வந்து தங்கவேண்டும் என்று அம்மாவும் அப்பாவும் அவனுக்குச் சொல்கிறார்கள்; இதோடு நூறு தடவை சொல்லிவிட்டார்கள். நாங்கள் சென்னைக்கு அடிக்

கடி வரவண்டும் என்றுதான் சிங்காரம் பதிலுக்குச் சொல்கிறுன்.

ரயில் வண்டி நகர்கிறது.

"வாரம் தவருமல் கடிதம் எழுதிவா!" என்கிறேம்.

சென்னையிலிருந்து தன் 'போட்டோ' ஒன்று எனக்கு அனுப்புவதாக அத்தான் சொல்லியிருக்கிறுன்.

அது நல்லதுதான். இருந்தாலும் அவனை நேரில் பார்ப்பதுபோல் ஆகுமா?

## பயிற்சி

I. விடை எழுது :—

1. 'நாங்கள் வந்தது ரெயில் ஏறுவதற்காக அல்ல.' பின். எதற்காக?
2. 'சிங்காரம்போல நாமும் ஆகவேண்டும் என்று எங்களுக்கு ஆசை.' ஏன்?
3. 'சிங்காரம் இந்த ஊருக்கு வந்தது எதற்காக'?
4. 'அவன் ஏன் மார்கழி விடுமுறைக்குக்கூட சென்னை போகவில்லை?
5. 'ஜனக் கூட்டம் நிறைந்த சென்னையில்கூட இனி அவனுக்கு நோய் எதுவும் வராது.' ஏன்?
6. சென்னையிலிருந்து சிங்காரம் என்ன அனுப்பப் போகிறுன்?

II. குறிப்பிட்டபடி மாற்றி எழுது :—

**ஸ்டேஷனில் ரெயில் வண்டிக்காகக் காத்திருக்கிறேம்.**
**ஸ்டேஷனில் ரெயில் வண்டிக்காகக் காத்திருந்தோம்.**

1. அவன் பேச்சில் தனியான ஒரு வேடிக்கை கலந்திருக்கும்.
2. அவன் அப்பா அவனைப் பார்த்துவிட்டுப் போகிறார்.
3. அவனோடு சேர்ந்து சாப்பிட்டுப் படித்து வருகிறேன்.
4. ஆரோக்கிய வழிகளை அவன் தெரிந்துகொண்டிருக்கிறான்.
5. ஒவ்வொரு லீவுக்கும் இங்குவந்து தங்கவேண்டும் என்று அப்பாவும் அம்மாவும் அவனுக்குச் சொல்கிறார்கள்.
6. ரெயில் வண்டி நகர்கிறது.
7. 'வாரம் தவறாமல் கடிதம் எழுதிவா!' என்கிறோம்.

## பாடம் 33 முப்பத்துமூன்று



### வானவில்

ஆற்றில் மிதந்திடும் படகும்
கடலில் மிதந்திடும் கப்பலும்

**இலக்கணம்:—** இலக்கணம் கற்றுக்கொள்ளாமல் சுத்தமாகப் பேசவோ எழுதவோ முடியாதென்று நினைப்பது தவறு. சிறுவர்களுக்குச் சுத்தமான பாஷை கற்றுக்கொடுப்பது இலக்கணம் மூலமல்ல, பயிற்சி மூலம்தான்.

இவ் வகுப்பில், பெயர்ச்சொல் வினைச்சொல் வேற்றுமை, ஒருமை பன்மை வேற்றுமை, வாக்கியத்தின் தன்மை—இவைகளைக் கற்றுக்கொடுத்தால் போதுமானது. ஒவ்வொரு வாக்கியத்தின் கடைசியில் முற்றுப்புள்ளி போடவும் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் எழுத்து வரிசைக் கிரமத்தைக் கற்றுக்கொள்வதற்குப் பல அப்பியாசங்களும் இங்குசேர்க்கப்பெற்றுள்ளன.

பாஷைப் பயிற்சியில் முதல் படிதான் மிகவும் முக்கியமானது. ஆகையால் முதலிலிருந்தே பிள்ளைகளின் பேச்சிலும் வாசிப்பிலும் எழுத்திலும் பிழைகள் நேராதபடிக் கவனித்தாக வேண்டும்.

ஐ. எல். எஸ். டி.. பிரஸ், மதராஸ் 2.